திருமூலர் அருளிய

திருமந்திரம்

ஆறாம் தந்திரம்

உ

அன்பே சிவம்

பதிப்புரிமை © 2023
முதல் பதிப்பு 2023

திருமூலர் அருளிய

திருமந்திரம்

ஆறாம் தந்திரம்

விளக்கம்

த. சரவணன்

திருமூலர் வரலாறு

திருக்கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல் பூண்ட திருநந்தி தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற சுந்தரநாதர் என்னும் சிவயோகியார் ஒருவர் இருந்தார். இவர் திருக்கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர் மரபில் முதலானவராகிய அகத்தியருக்கு அடுத்தவர் இவர் எனக் கருதப்படுகின்றார். திருக்கைலாயத்தில் திருநந்தி தேவரின் உபதேசம் பெற்றவர்.

இவர் அகத்திய முனிவரிடத்தில் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அகத்தியர் எழுந்தருளியிருக்கும் பொதிகை மலையை அடையும் பொருட்டு திருக்கைலையிலிருந்து புறப்பட்டு தென்திசை நோக்கி சுந்தரநாதன் என்ற பெயருடன் சென்றார். அகத்தியரை காணச் செல்லும் வழியில் சாத்தனூர் என்னும் ஊரில் பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். பசுவை மேய்க்கும் மூலன் என்பவன் இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச்சுற்றி வந்து வருந்தி அழுதன. மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட சிவயோகியாரது உள்ளத்தில் இப்பசுக்களின் துயரத்தினை நீக்குதல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த இடையன் உயிர் பெற்று எழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்காது என எண்ணிய சிவயோகியார் தம்முடைய திருமேனியைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்னும் சித்தியினால் தமது உயிரை இறந்த இடையனது உடம்பில் புகுமாறு செலுத்தினார். மூலன் அதுவரை உறங்கியிருந்தவன் போல் சட்டென்று கண் விழித்து திருமூலராய் எழுந்தார்.

திருமூலர் விழித்தெழுந்ததைக் கண்டு பசுக்கள் மகிழ்ந்து அவரது உடலை நாவினால் நக்கித் தங்களின் அன்பை வெளிப்படுத்தின. அவரும் பசுக்களைத் தட்டிக்கொடுத்து அவற்றோடு சேர்ந்து மகிழ்ந்தார். மாலை வந்ததும் வீடு நோக்கி பசுக்கள் புறப்பட திருமூலரும் கூடவே புறப்பட்டார். ஒவ்வொரு பசுவும் தத்தம் வீடு அறிந்து புகுந்து கொண்டன. திருமூலர் அவற்றை எல்லாம் வீடு சேர்த்தார். ஆனால் மூலன் மட்டும் அவரது வீட்டிற்கு போக விரும்பவில்லை. அவர் ஞான திருஷ்டியால் மூலனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை அறிந்தார். அதனால் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்தார்.

மூலனின் மனைவி கணவன் வரவை வெகு நேரமாக எதிர்பார்த்துப் பயன் ஏதும் இல்லாததால் கணவனைத் தேடிப் புறப்பட்டாள். வரும் வழியிலே ஓரிடத்தில் கணவன் அமர்ந்து இருப்பதைக் கண்டு அருகே சென்று வீட்டிற்கு வரக் காலதாமதம் ஆனது பற்றி கேள்விகளாக கேட்டாள். திருமூலர் மௌனமாகவே இருந்தார். மூலனின் மனைவிக்கு புரியவில்லை. திருமூலரின் கையைத் தொட்டு அழைக்க முற்பட்டாள். அம்மையார் செய்கை கண்டு திருமூலர் சிறிது

எட்டி விலகினார். அதைக் கண்டு அந்தப் பெண்மணி அஞ்சி நடுங்கி உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தது? எதற்காக இப்படி விலகுகிறீர்கள்? என்று மன வருத்தத்தோடு கேட்டாள். என்னால் உன் வீட்டிற்கு வர முடியாது. உனக்கும் எனக்கும் இனி மேல் எவ்வித உறவும் கிடையாது. அதனால் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு அமைதி பெறுவாயாக என்று கூறினார். அதற்குமேல் அவள் முன்னால் நிற்பதும் தவறு என்பதை உணர்ந்து திருமூல யோகியார் அத்தலத்திலுள்ள திருமடம் ஒன்றுக்குச் சென்று சிவயோகத்தில் அமர்ந்தார். கணவனின் நிலையைக் கண்டு கதிகலங்கிப் போனாள் மனைவி. கணவனின் மனமாற்றத்தைப் பற்றி ஒன்றும் புரியாமல் கவலையோடு வீடு திரும்பினாள்.

மறுநாள் மூலனின் மனைவி சுற்றத்தாரை அழைத்துக்கொண்டு அவர் இருக்குமிடத்திற்கு வந்தாள். யோக நிலையில் அமர்ந்திருக்கும் திருமூலரின் முகத்தில் தெய்வ சக்தி தாண்டவமாடுவது போன்ற தனிப் பிரகாசம் பொலிவு பெறுவது கண்டு இவர் ஒரு முனிவர் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தும் அவர்கள் மூலனின் மனைவிக்காக திருமூலரிடம் வாதாடினார்கள். ஒரு பலனும் கிட்டவில்லை. அதன் பிறகு அவர்கள் மூலனின் மனைவியிடம் உன் கணவர் முன்னைப்போல் இல்லை. இப்பொழுது அவர் முற்றும் துறந்த முனிவராகி விட்டார். இனிமேல் இந்த மெய்ஞானியாரோடு வாழ வேண்டும் என்பது நடக்காத காரியம் என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட மூலனின் மனைவி அவரது கால்களில் விழுந்து வணங்கி வேதனையோடு வீடு திரும்பினாள். பிறகு திருமூலர் மறைவாக இருந்த தமது திருமேனியைத் தேடினார். கிடைக்கவில்லை. முதலில் யோகியாருக்கு சற்று வியப்பாகவே இருந்தது. யோக நிலையில் அமர்ந்தார். தமது தபோ வலிமையால் இறைவன் அருளிய வேத ஆகமப் பொருள்களைத் தமிழிலே வகுத்து உலகோர்க்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே இறைவன் தம் உடலை மறைத்தருளினார் என்பதை உணர்ந்து கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்ட திருமூலர் திருவாவடுதுறை திருத்தலத்தை அடைந்து மூலவர் பெருமானைப் பணிந்தவாறு மதிலுக்கு வெளியே மேற்கு பக்கமாக அமைந்துள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளையும் ஓர் ஆண்டிற்கு ஒரு மந்திரப் பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களை பாடினார். உலகோர் உய்யும் பொருட்டுத் திருமந்திர மாலையை அருளியபின் திருமூலர் சிதம்பரம் சென்று தில்லை நாதனுடன் கலந்து தனது குருவாகிய நந்தியிடம் தஞ்சம் அடைந்தார்.

திருமூலர் திருமந்திரம் எழுதி முடித்தவுடன் அதை வெளியிடவில்லை. யாரும் அறியாதவாறு தான் அமர்ந்திருந்த திருவாவடுதுறை ஆலயத்தின் கொடி மரத்தின் அடியில் தான் எழுதிய திருமந்திரம் அடங்கிய ஓலைச் சுவடிகளைப் புதைத்து வைத்துவிட்டு அவர் சிதம்பரம் சென்று நந்தீசுவரருடன் கலந்து விட்டார். அதன் பிறகு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சைவக் குரவர்கள் என்று போற்றப்படும் நால்வர்களில் ஒருவருமான திருஞான சம்பந்தர் திருவாவடுதுறை திருத்தலத்தின் வாயிலுக்குள் நுழைந்தவுடன் இறைவனின் திருவருளால் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் அற்புதமான தமிழ் வாசனை அவரை வந்தடைய அதனால் ஈர்க்கப்பட்டுத் தன்னுடன் வந்தவர்களிடம் இங்கே அருமையான தமிழ் வாசனை வருகின்றதே என்ன என்று பாருங்கள் என்று கூறி கொடி மரத்தின் அடியில் உள்ள மண்ணைத் தோண்டச் செய்து அங்கே திருமூலர் புதைத்து வைத்திருந்த திருமந்திர ஓலைச் சுவடிகளை கண்டு எடுத்தார். அவற்றை படித்து உணர்ந்து அதன் அருமை பெருமைகளை உலகோர் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்று வெளியிட்டு அனைவருக்கும் ஓதி அருளச் செய்தார்.

பிற்காலத்தில் வந்த சேக்கிழார் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றித் தான் எழுதிய பெரிய புராணத்தில் திருமூலரை நாற்பத்து ஆறாவதாக சேர்த்து திருமூலரின் வாழ்க்கை வரலாற்றையும் திருமந்திரப் பாடல்களின் குறிப்பும் எழுதி வைத்தார். அவருக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பி சைவ சான்றோர்கள் பலர் அருளியிருந்த சைவத் திருமுறைகளை ஒன்றாகத் தொகுத்த போது திருமூலர் அருளிய திருமந்திரத்தையும் பத்தாவது திருமுறையாகத் தொகுத்து அருளினார்.

திருமந்திரம் முன்னுரை

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் படைப்பு ஆகும். இது ஒன்பது தந்திரங்களுடன் மூவாயிரம் பாடல்கள் உடையது. ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும் ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும் அந்த ஒவ்வொரு வரியிலும் புள்ளி எழுத்துக்கள் நீங்கலாக 12 எழுத்துக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

வேதம் ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்று சான்றோர் கூறுவர். மேலும் சிவமே அன்பு அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் மூன்று அதிமுக்கியமான வாக்கியங்களை இன்றளவும் நாம் பயன்படுத்தும் விதமாக அருளியுள்ளார் அவையாவன:

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
அன்பே சிவம்

திருமந்திரம் நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்ற பெயரே முதலில் இருந்தது. அந்த நூலில் இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாக உள்ளதால் அந்த நூல் திருமூலர் திருமந்திரம் என்று பின்னர் வழங்கப்பட்டது.

எமது முன்னுரை

திருமந்திரம் பாயிரம் பகுதியில் திருமந்திரத் தொகை சிறப்பில் திருமூலர் திருமந்திரத்தை பற்றி விவரிக்கிறார்.

திருமூலனாகிய யாம் வழங்கிய இந்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் யாம் பெற்ற இன்பம் இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் பெற வேண்டும் என்ற அன்பினாலேயே எம் குருநாதன் இறைவனின் அருளால் வழங்கப் பெற்றது. இந்த மந்திரங்களைக் காலையில் எழுந்து அவற்றின் பொருளை ஓதி உணர்ந்து அதில் உள்ள கருத்துக்களைக் கடைபிடித்து வந்தால் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனாகிய சதாசிவமூர்த்தியைச் சென்று அடைந்து யாம் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெறலாம் என்று பாடல் #99 இல் அருளுகிறார்.

உயிர்கள் அனைத்தும் இறைவனை உணர்ந்து வீடு பேறு அடைய வேண்டும் என்கின்ற அன்பினால் யாம் உயிர்களுக்கு வைத்த பேரின்ப பரிசு திருமந்திரம் என்னும் பேரின்ப நன்மை தரும் நூலாகும். இந்த நூலிலுள்ள மூவாயிரம் பாடல்களில் யாம் வழங்கியிருப்பது இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளும் அதன் முடிவில் இறைவனோடு என்றும் கலந்து இருக்கும் பேரின்பத்தின் விளக்கங்களும் ஆகும். இறைவனின் அருளால் அறிவுப்பூர்வமாக இயற்றப்பெற்ற இந்த மூவாயிரம் பாடல்களும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இந்த மூவாயிரம் பாடல்களையும் தமது சிந்தையில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து போற்றி வருபவர்களுக்கு அனைத்துவிதமான சிறப்புகளையும் கொடுக்குமென பாடல் #100 இல் அருளுகிறார்.

இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாகவும் சொல்லினால் விவரிக்க முடியாத இந்த சிறப்பு வாய்ந்த திருமந்திரம் பாடல்களுக்கு திருமூலரின் அருளாலும் எமது குருநாதர் ஆதி அருணாசல சித்தர் கே.வி. நாராயணன் அவர்களின் அருளாலும் தினம் ஒரு திருமந்திரம் பாடலுக்கு சில வருடங்களாக விளக்கம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னும் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. எழுதியவரை பாடல்களை சில வருடங்களாக தினந்தோறும் முகநூல் (பேஸ்புக்) வழியாகவும் புலனம் (வாட்ஸ்அப்) வழியாகவும் கேவிஎன்திருமூலர்.காம் வலைதளத்தின் வழியாகவும் பதிவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தினமும் ஒரு திருமந்திரம் பாடலுடன் விளக்கத்தை இவற்றின் மூலம் படித்து பயன் பெறுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

திருமந்திர விளக்கங்கள் அனைத்தும் இறுதியானவைகள் அல்ல. தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அதன் உண்மை தன்மை விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டு திருத்தப்படுகின்றன. படிப்பவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு விடை தெரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது மின்னஞ்சல் (ஈமெயில்) வழியாகவும் வலைதளம் மற்றும் முகநூல் (பேஸ்புக்) புலனம் (வாட்ஸ்அப்) வழியாகவும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

திருமந்திரம் பாடல்களை 3000 வருடங்கள் தவம் இருந்து 3000 பாடல்கள் எழுதியிருக்கின்றோம் என்று திருமூலர் தனது பாடல்கள் வழியாகவே அருளியிருக்கின்றார். ஆனால் பல தலைமுறைகள் தாண்டி தற்போது நமக்கு கிடைத்திருப்பவை 3047 பாடல்கள். இதில் அதிகமாக இருக்கும் 47 பாடல்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தெரிந்து கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது எழுத்துப்பணிக்கு உதவி புரிந்த நண்பர் ஸ்ரீநிவாசன் அவரின் பணி மிகவும் மகத்தானது. அவருக்கு வணக்கத்துடன் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தினந்தோறும் எழுதிய திருமந்திரத்தை புத்தக வடிவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எம்மை உற்சாகப்படுத்திய இணையதள நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

PDF புத்தகமாக உள்ள திருமந்திரம் பாடல்களின் விளக்கங்கள் கொண்ட இந்த ஆறாம் தந்திரத்தின் தொகுப்பு அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்றும் அனைவரும் படித்து பயன் பெற வேண்டும் என்றும் அமேசான் கிண்டிலிலும் பேஸ்புக் வாட்ஸ்அப் மற்றும் வலைதளங்களிலும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. இறை பணியாக செய்யும் இச்செயலை தயவு செய்து யாரும் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

த. சரவணன்
https://kvnthirumoolar.com
https://www.facebook.com/groups/thirumandhiram.daily/
saravana.0801@gmail.com

வாழ்த்துரை

குருவருளும் திருவருளும் கொண்டு திரு. சரவணன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிதனைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஆதி அருணாசல சித்தர் குருஜி ஸ்ரீ நாராயணன் அவர்களின் அன்பும் ஆசியாலும் காக்கப்பட்ட எங்களுக்கு சற்குரு பகவான் திருமூலரின் பேரருளும் வழிகாட்டுதலும் கிடைக்கப் பெற்றோம். திரு. சரவணன் அவர்கள் சிறு வயது முதலே சிறந்த பக்தியும் ஆன்மீக நாட்டமும் உள்ளவர். பல வழிபாடுகளில் அவர்தம் ஆற்றிய பணிகள் பல. அவரை "தம்பி சரவணன்" என சற்குரு பகவான் திருமூலரின் அருள்வாக்கில் அழைக்கப்பட்டு பாராட்டு பெற்று ஒரு எடுத்துக் காட்டாக திகழ்பவர்.

அவரது ஆர்வத்தினால் தொடர்ந்து பல ஆன்மீக நூல்களைப் படிப்பது மட்டுமல்லாது திருமந்திரத்தை பல முறை படித்து உட்பொருள் அறிந்து யாவருக்கும் பயன்படுமாறு எளிய முறையில் பதிவிட்டு வருகிறார். தன்னுடைய முதன் முயற்சியாக ஆறு தந்திரங்களின் பாடலுடன் பொருளினை சிறந்த விளக்கத்துடன் யாவரும் பயனுறும் வண்ணம் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் PDF வடிவில் வெளியிட உள்ளார்.

இவரது முயற்சி தொடர வேண்டும். அதில் யாவரும் பயன் பெற சற்குரு பகவான் திருமூலரின் திருவடிகளை வணங்கி போற்றி அவருக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வ.செ. தணிகைநாயகம்.
செயற் பொறியாளர் (ஓய்வு)
தமிழ்நாடு மின்சார வாரியம்.
சென்னை.

பாடல் #1573: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

பத்திப் பணிந்து பரவும்படி நல்கிச்
சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச்
சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்த மிறையே சிவகுரு வாமே.

விளக்கம்:

பக்தியையும் இறைவனை வணங்கி பணிவதையும் செய்கின்ற அடியவரின் புகழை மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் படி கொடுத்து அருளி, தூய்மையான பக்தியால் சொல்வது அனைத்தும் நிகழும் சத்திய வாக்கையும் கொடுத்து அருளி, ஒரு குற்றமும் இல்லாமல் போகும் படி பல விதமான சோதனைகளால் சோதித்து, நிலையானதாகிய சிவமும் நிலையில்லாததாகிய உடலும் நிலையில்லாத உடலுக்குள் நிலையாக நிற்கின்ற ஆன்மாவும் தாமே என்பதை காட்டி அருளியதால் அடியவர்களின் சித்தத்திற்குள் நிலைத்திருக்கும் இறை சக்தியே அருளைக் கொடுக்கின்ற குருவாக வந்து இருக்கின்றான்.



பாடல் #1574: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலா னாட்டகத்
தாசற்ற சற்குரு வப்பர மாமே.

விளக்கம்:

அடியவர் உலகப் பற்றுக்களின் மேல் வைத்திருக்கும் பல விதமான பந்த பாசங்களை ஒன்றாக கூட்டி அதை ஒரு கட்டாக கட்டி வைத்து அதை அடியவரிடமிருந்து பறித்து நீக்கி வெளியில் எறிந்து விட்டு இது வரை என்னுடையது என்று அடியவர் தனது உடலின் மீது கொண்டிருந்த ஆசையை விடுவித்து இறைவனுக்கு நேரானதாகவும் சரிசமமாகவும் இருக்கின்ற ஒரு பழியும் இல்லாத முக்தியில் சேர்த்து அருளியதால் இந்த உலகத்தில் இருக்கும் போதே ஒரு குற்றமும் இல்லாத உண்மையான குருவாக அந்த பரம்பொருளே வந்து வழிகாட்டி அருளுகின்றான்.

பாடல் #1575: ஆறாம் தந்திரம் – 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

சித்திக ளெட்டோடுந் திண்சிவ மாக்கிய
சுத்தியு மெண்முத்தி தூய்மையும் யோகத்துச்
சத்தியு மந்திரஞ் சாதகம் போதமும்
பத்தியு நாத னருளிற் பயிலுமே.

விளக்கம்:

மாபெரும் சித்திகளாகிய அட்டமா சித்திகளோடு உறுதியான சிவப் பரம் பொருளாகவே அடியவரையும் ஆக்குவதற்கு பல விதமான சோதனைகளை செய்து பெற்ற பக்குவமும், பல விதமான எண்ணங்களில் இருந்து விடுதலை அடைந்து மோன நிலையில் எண்ணங்கள் இல்லாத தூய்மையான மனமும், அந்த நிலையிலேயே இருக்கின்ற யோகமும், அதனால் தான் நினைப்பதும் சொல்லுவதும் அப்படியே நிகழ்கின்ற சக்தியும், மந்திரம் போன்ற சொற்களும், செய்கின்ற அனைத்து செயல்களும் சாதகமாகவும், முக்காலமும் அறிந்த ஞானமும், உண்மையான சரணாகதியாகிய பக்தியும், ஆகிய இவை அனைத்தும் தலைவனாக வந்து குருநாதராக வழிகாட்டிய இறைவனின் திருவருளால் அடியவர்கள் கற்றுக் கொள்ளலாம்.

பாடல் #1576: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

எல்லா வுலகிற்கு மப்பாலோ னிப்பாலாய்
நல்லா ருளத்து மிக்கரு ணல்கலா
லெல்லாரு முய்யக் கொண்டிங்கே யளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே.

விளக்கம்:

அண்ட சராசரங்களில் இருக்கின்ற அனைத்து உலகங்களையும் தாண்டி இருக்கின்றவனாகிய இறைவன் இந்த உலகத்தின் பக்கத்திலும் இருக்கின்றான். அவன் அன்பு கொண்ட நல்லவர்களின் உள்ளத்தில் இருந்து மாபெரும் கருணையினால் மிகவும் அதிக அளவில் அருளை கொடுத்துக் கொண்டே இருக்கின்றான். இந்த அருளால் இந்த உலகத்தில் உள்ள நல்லவர்கள் மட்டுமின்றி அனைவரும் மேல் நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அவனது திருவருளை வழங்குகின்றான். ஆதலால் சொல்லை முழுவதுமாக சொல்லி அடியவரை தெளிவு படுத்தும் நன்மையே வடிவான குருவாக இருப்பது பரிசுத்தமான சிவப் பரம் பொருளே ஆகும்.

பாடல் #1577: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

தேவனுஞ் சித்த குருவு முபாயத்துள்
யாவையின் மூன்றா யினகண் டுரையவே
மூவா பசுபாச மாற்றிய முத்திப்பா
லாவையு நல்குங் குருபரனன் புற்றே.

விளக்கம்:

அடியவர்கள் செய்கின்ற அனைத்து செயல்களுக்கும் இயக்கமாக இருக்கின்ற தேவனாகவும், அடியவரின் சித்தத்தை தெளிவு படுத்தி இறைவனை அடைவதற்கு குருவாகவும் அவரே வழிகாட்டி உள்ளே இருந்து அடியவர்களின் ஆன்மாவானது மூன்றாக இருப்பதை மாயை நீங்கி கண்டு கொள்ளும் படி அருளி அதை புரிந்து கொள்ளும் படி உபதேசித்து மூன்றாக இருக்கின்ற பதி பசு பாச தத்துவத்தில் பசுவாகிய ஆன்மாவையும், பாசமாகிய தளையையும் மாற்றி அமைத்து ஆன்மாவானது பதியாகிய இறைவனை அடைவதற்கான வழியாகிய முக்தியை கொடுப்பதால் ஆன்மாவிற்குள் இவை மூன்றையும் உணர்வதை கொடுத்து அருளும் குருவாக பரம்பொருளே இருப்பது அடியவர்களின் மீது கொண்ட அன்பினால் ஆகும்.

பாடல் #1578: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

சுத்த சிவன்குரு வாய்வந்த துய்மைசெய்
தத்தனை நல்லருள் காணா வதிமூடர்
பொய்யத்தகு கண்ணா னமரென்பர் புண்ணி
யரத்த னிவனென் றடிபணி வாரே.

விளக்கம்:

பரிசுத்தமான சிவப் பரம்பொருளே குருவாக வந்தது அனைத்து உயிர்களும் மேல் நிலைக்கு செல்ல வேண்டும் என்கின்ற மாபெரும் கருணை செய்து அனைவருக்கும் தந்தையாக இருந்து நன்மையான அருளை வழங்குதற்காகவே ஆகும். இதை கண்டு உணராத மிகவும் குருடர்களான மூடர்களே தங்களின் பொய்யான எண்ணங்களுக்கு தகுந்தது போல மூன்றாவது கண்ணைக் கொண்டு எரித்து அழிக்கும் இவன் எமனே என்று அறிவின்மையால் கூறுவார்கள். ஆனால் இதை கண்டு உணர்ந்த புண்ணியர்களாகிய அடியவர்களோ அனைவருக்கும் தந்தையாக இருப்பவன் இவனே என்று குருவாக வந்த இறைவனின் திருவடிகளை தொழுது வணங்குவார்கள்.

பாடல் #1579: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

உண்மையும் பொய்மை யொழித்தலு முண்மைபாற்
றிண்மையு மொண்மைச் சிவமாய வல்வரன்
வண்மையு மெட்டெட்டுச் சித்த மயக்கவந்
தண்ண லருளன்றி யாரறி வாரே.

விளக்கம்:

அடியவர்கள் உலகத்தில் பார்க்கின்ற அனைத்தும் உண்மை என்று நினைக்கின்ற மாயையை நீக்கி பொய்யான உலக அறிவினை அழிப்பதையும், பரம்பொருளாகிய உண்மையின் மேல் மன உறுதியுடன் சிவத்தோடு ஒன்றி இருக்க வைப்பதையும், தீமையை நெருங்க விடாமல் தடுக்கும் நல்ல பாதுகாப்பு அரனாக வலிமையுடன் நிற்பதையும், ஆகிய இவை அனைத்தையும் உலக அறிவாகிய அறுபத்து நான்கு கலைகளால் சித்தம் மயங்கி வந்தவர்களால் அறிந்து கொள்ள முடியுமா? தலைவனாகிய இறைவனின் திருவருள் இல்லாமல் இவற்றை யாரால் அறிந்து கொள்ள முடியும்? ஆகவே சிவ குருவாக வந்த இறைவனின் திருவருளாலேயே அனைத்தையும் அடியவர்களால் அறிந்து கொள்ள முடியும்.

பாடல் #1580: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் (இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது)

சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே.

விளக்கம்:

சிவப் பரம்பொருளே சிவத்தை அறிந்த ஞானியாகவும் இருப்பதால் சிவத்தை அறிந்த உண்மை ஞானியாகிய குருவையே சிவப் பரம்பொருள் என்று குருவின் திருவடியை சரணடைய முடிந்தவர்களுக்கு அவர்களுக்குள் தோன்றுகின்ற புதுமையான அற்புதமான ஞானத்தின் மூலம் நன்மையைத் தரும் முக்தியை அடைந்து இந்த உலக வாழ்கை என்பது இனி எப்போதும் இல்லாத நிலையில் இறைவன் இருக்கின்ற உலகத்தை அடைவார்கள்.

பாடல் #1581: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

குருவே சிவமென்னக் கூறின னந்தி
குருவே சிவமென்பது குறித் தோரார்
குருவே சிவமாகக் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

விளக்கம்:

தமக்கு குருவாக அமைந்தவரே சிவப் பரம்பொருள் என்று கூறியருளினார் குருநாதராகிய இறைவன். ஆயினும் குருவாக இருப்பது சிவப் பரம்பொருளே என்பதை தமக்குள் சிந்தித்து ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் பலர் இருக்கின்றார்கள். அவ்வாறு ஆராய்ந்து அறிந்து கொண்டால் தமது குருவே அன்பையும் அருளையும் கொடுக்கும் சிவப் பரம்பொருளாகவும், வழிகாட்டியும் தவறு செய்தால் தண்டிக்கும் தலைவனாகவும் நிற்கின்றதை அறிந்து கொள்ளலாம். அவ்வாறு அறிந்து கொண்டவர்களுக்கு தமது குரு என்பவர் சொற்களால் விவரிக்க முடியாதவராகவும் ஐம் புல உணர்வினால் முழுமையாக உணர முடியாதவராகவும் இருக்கின்ற ஒரு இறைவனாக இருப்பார்.

பாடல் #1582: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

சித்த மியாவையுஞ் சிந்தித் திருந்தாரு
மத்த னுணர்த்து வதாகு மருளாலே
சித்த மியாவையுந் திண்சிவ மாண்டக்கா
லத்தனு மவ்விடத் தேயமர்ந் தானே.

விளக்கம்:

தங்களின் எண்ணத்தில் முழுவதும் இறைவனையே வைத்து அவனையே சிந்தித்து இருக்கின்ற அடியவர்களுக்கு இறைவனே தந்தையாக வந்து அனைத்தையும் வழி காட்டி உணர வைப்பது எதனால் என்றால் அவனது திருவருளாலே ஆகும். அப்போது அடியவரின் எண்ணங்கள் முழுமையும் உறுதியாக பற்றிக் கொண்டு சிவப் பரம்பொருளே ஆட்கொள்ளும் காலத்தில் தந்தையாக இருந்து வழி காட்டுகின்ற இறைவனும் அடியவரின் எண்ணங்கள் இருக்கின்ற சித்தத்திலேயே குருவாக வந்து வீற்றிருப்பான்.

பாடல் #1583: ஆறாம் தந்திரம் – 1. சிவகுரு தரிசனம் (இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது)

தானந்தி நீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்றும் கீழுமொரு வர்க்குத்
தானந்தி யங்கித் தனிச்சுட ராமே.

விளக்கம்:

அடியவர் தாமே குருவாக இருக்கின்ற இறைவனின் மழை போன்ற அளவில்லாத தன்மையில் அடியவரின் பாத்திரம் போன்ற பக்குவத்துக்கு ஏற்ற தன்மைகளை அடையும் பொருட்டு தமக்குள் சந்தித்த இறைவன் தனது அருளால் சிறப்பாக வைத்து அருளிய ஞானத்தின் மூலம் வழிகாட்டியும் தவறு செய்தால் தண்டிக்கும் தலைவனாகவும் குருவாகவும் இருக்கின்ற இறைவனாகிய எமது தந்தையே எனும் உண்மையை அறிந்து கொள்ளுகின்றவர்கள் யாரும் இல்லை. அவ்வாறு அறிந்து கொண்டவர்களுக்கு வானத்தில் இருந்து பொழியும் மழை போல குருவாக வீற்றிருந்து அனைவருக்கும் அருளும் இறைவனே என்றும் இந்த உலகத்திலும் இறைவனது உண்மை ஞானத்தை உணர்ந்த ஞானியாகிய ஒருவரின் பக்குவத்துக்கு ஏற்ற பாத்திரமாகி தாமே குருவாக இருக்கின்ற இறைவனின் நிலையில் நின்று அனைவருக்கும் நன்மை தரும் நெருப்பாகவும் தனக்கு சரிசமமாக வேறு எதுவும் இல்லாத தனிப் பெரும் சுடர் ஒளியாகவும் இருக்கின்றார்.

கருத்து: குருவாக இருக்கின்ற இறைவன் மழை போல தனது அருளை வழங்கினாலும் இந்த உலகத்தில் இறைவனின் அருளை உணர்ந்த ஞானிகளின் பக்குவத்துக்கு ஏற்றபடி யார் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களே அனைவருக்கும் நன்மை செய்யும் தனிப் பெரும் சுடரொளியாக திகழ்கின்றார்கள்.



பாடல் #1584: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

திருவாகிச் சித்தியு முத்தியுஞ் சீர்மை
யருளா தருளு மயக்கறு வாய்மை
பொருளாய வேதாந்த போதமு நாத
னுருவருளா விடிலோர வொண் ணாதே.

விளக்கம்:

அடியவரின் உள்ளிருக்கும் ஜோதியே தெய்வமாக வீற்றிருந்து அனைத்து சித்திகளையும் கொடுப்பதும் முக்தியாகிய விடுதலையையும் கொடுப்பதும் உள்ளிருந்து வழிகாட்டி இறைவனை அடைவதற்கான வழியில் செல்ல வைப்பதும் வெளிப்புறத்திலிருந்த அருளாமல் குருவாக தமக்கு உள்ளிருந்தே அருளி மாயையாகிய மயக்கத்தை அறுப்பதும் உண்மை பொருளாகிய வேதத்தின் எல்லையாகிய ஞானத்தை கொடுப்பதும் ஆகிய இவை அனைத்தும் இறைவனே சிவகுருவாக அடியவரின் உள்ளுக்குள் இருந்து அருளாமல் போனால், அடியவரால் தாமாகவே எப்போதும் ஆராய்ந்து அறிந்து கொள்ளவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ முடியாது.

பாடல் #1585: ஆறாம் தந்திரம் – 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

பத்தியு ஞான வயிராக்க மும்பர
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்
முத்தியில் ஞான முளைத்தலா லம்முளை
சத்தி யருடரிற றானெளி தாமே.

விளக்கம்:

இறைவனிடம் மிகுந்த பக்தியும் அவனை அடைய வேண்டும் என்ற ஞானத்தில் மிகவும் உறுதியாக நிற்பதும் பரம் பொருளை அடைவதற்கு விதையாக இருக்கின்றது. இந்த விதையானது தமக்குள் இருக்கின்ற சிவமே தாம் என்பதை உணர்ந்து அந்த இறை சக்தியோடு ஒன்றாக சேர்ந்து இருப்பதால் தான் கிடைக்கின்றது. இந்த நிலையில் இருக்கும் போது கிடைக்கின்ற முக்தி எனும் விடுதலையில் உண்மை அறிவான ஞானத்தை இந்த விதையே தமக்குள் முளைக்க வைக்கின்றது. ஆனால் இந்த ஞானத்தை முளைக்க வைப்பதற்கு தமக்குள் இருக்கின்ற இறை சக்தியானது தனது அருளை கொடுத்தால் தான் எளிமையாக நடக்கும். இல்லாவிட்டால் கடினமே.

பாடல் #1586: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

பின்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனே யெம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே.

விளக்கம்:

அடியவர்கள் தாங்கள் செய்கின்ற சாதகங்களால் பெற்ற புண்ணியத்தின் பயனால் பிறகு எடுக்கின்ற ஏதோ ஒரு பிறவியில் அடையக் கூடிய துன்பமில்லாத இன்பமான பிறவியை இந்த பிறவியிலேயே அடையும் படி கொடுத்து அருளுவதும் இந்த பிறவியை எடுப்பதற்கு முன்பே அந்த நிலையை அடையும் படி வைத்து அருளியதும் அனைத்திற்கும் முதல்வனாக இருக்கின்ற எமது இறைவனே ஆகும். அந்த இன்பமான பிறவியிலும் ஆசைகளின் மேல் செல்லாமல் இறைவன் மேல் எண்ணம் வைக்கின்ற நிலையை அடியவர் தாமும் அடையும் காலத்தில் இறைவன் தாமே அடியவருக்குள்ளிருந்து வெளிப்பட்டு என்றும் அவனை விட்டு நீங்காமல் உறுதியாக அவனையே பற்றிக் கொண்டு இருக்கின்ற உறுதியான மன வலிமையை அடையும் படி செய்து அருளுகின்றார்.

பாடல் #1587: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவு முத்தி
சிவமான ஞானஞ் சிவபர தேகுஞ்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.

விளக்கம்:

சிவமாகவே ஆகிவிட்ட பேரறிவு ஞானத்தினால் அடியவரின் மனமும் முழுமையாக தெளிவு பெற்று அவரது மனம் இறைவனோடு ஒன்றி இருக்கும் போது அனைத்து விதமான சித்திகளையும் பெற்று விடுவார். அப்படி அவரது மனம் தெளியும் போதே அடியவர் விடுதலை எனும் முக்தி நிலையையும் பெற்று விடுவார். அப்போது சிவத்தின் பரம்பொருள் இருக்கின்ற பரவெளியில் தாமும் சென்று அடைகின்ற நிலையையும் அடியவர் பெற்று விடுவார். இப்படி சிவமாகவே ஆகிவிட்ட பேரறிவு ஞானமே சிவத்தின் பேரானந்த நிலையை அதன் பிறகு அடியவருக்கு கொடுக்கும்.

பாடல் #1588: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மானிடர் வாழ்க்கை
பிறந்தொழிந் தேனிப் பிறவியை நானே.

விளக்கம்:

இந்த பரந்து விரிந்து இருக்கின்ற உலகம் முழுவதும் உள்ள பொருள்களை முழுமையாக அறிந்து உணர்ந்து கொண்டேன். அந்த அனைத்து பொருளுக்குள்ளும் சிறப்பாக விளங்குகின்ற உண்மை பொருளான இறைவனை உணர்ந்து கொண்டு அந்த இறைவனை ஓதி திரு அருளையும் பெற்றுக் கொண்டேன். பிற மனிதர்களின் வாழ்க்கையை தன்னுடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டு பார்த்து நடக்கின்ற தன்மையை மறந்து ஒழித்து விட்டேன். அவர்களை விட்டு பிரிந்து உலகப் பற்றுக்களை எல்லாம் ஒழித்து விட்டு இந்த பிறவியையும் நீங்கி விட்டேன்.



பாடல் #1589: ஆறாம் தந்திரம் - 1. சிவகுரு தரிசனம் [இறைவனே குருவாக வந்து தரிசனம் தருவது]

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ
னிருக்கின்ற தன்மையை யேது முணரார்
பிரிக்கின்ற விந்தப் பிணக்கறுத் தெல்லாங்
கரிக்கொன்ற வீசனைக் கண்டுகொண் டேனே.

விளக்கம்:

வினைகளை தீர்ப்பதற்காக உடலை எடுத்து வருகின்ற பல விதமான உயிர்கள் எல்லாவற்றுக்கும் தலைவனாகிய இறைவன் அந்த உயிர்களுக்குள்ளேயே மறைந்து இருக்கின்ற தன்மையை சிறிது அளவும் உணராமல் இருக்கின்றார்கள் உலகத்தவர்கள். இறைவனையும் ஆன்மாவையும் மாயையால் பிரித்து வைத்து இருக்கின்ற இந்த உலகப் பற்றுக்கள், ஆசைகள், பாசம் எனும் தளைகளை எல்லாம் அறுத்து விட்டு தான் எனும் அகங்காரத்தை கொன்று தனக்குள் இருப்பது ஈசனே என்பதையும் அவனே அனைத்திற்கும் தலைவனாகவும் இருக்கின்றான் என்பதையும் யான் கண்டு கொண்டேனே.

பாடல் #1590: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

இசைந் தெழுமன்பி லெழுந்த படியில்
பசைந் திடுமீசனார் பாசத்து ளேகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
வுவந்த குருபத முள்ளத்து வந்தே.

விளக்கம்:

இறையருள் சேர்ந்து இருக்கின்ற மனதில் எழுகின்ற உண்மையான அன்பில் இறைவன் எழுந்து அருளியதால், அடியவரோடு ஒன்றாக சேர்ந்து இருக்கின்ற இறைவனார் அடியவரின் பாசத் தளைகளை அவருக்குள்ளிருந்து விலகும் போகும் படி செய்து, அருள் வடிவமான பரம்பொருளே குருவாக வந்து அடியவரின் தலையின் மேல் தமது திருக்கைகளை வைத்து அருளுவார். அப்போது அந்த அருளால் மகிழ்ந்து இருக்கும் அடியவரின் உள்ளத்திற்குள் குருவாக வந்திருக்கும் இறைவனின் திருவடிகளானது வந்து வீற்றிருக்கும்.

பாடல் #1591: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு [குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை]

தாடந்த போதே தனைத்தந்த தெம்மிறை
வாடந்து ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மன்றியே யாள்கென விட்டருள்ப்
பாவின் முடிவைத்துப் பார்வேந்துந் தந்ததே.

விளக்கம்:

பாடல் #1590 இல் உள்ளபடி குருவாக வந்து தமது திருவடியை அடியவரின் உள்ளத்திற்குள் தந்த அந்த கணமே தன்னையும் தந்து அருளுகின்றார் எமது இறைவன். அதனோடு அடியவருக்கு ஞானமாகிய வாளையும் தந்து அந்த ஞானத்தை உபயோகிக்கும் பக்குவத்தையும் கொடுத்து வைத்து, அடியவருக்கு முக்தியாகிய எல்லையும் இல்லாமல் அவரின் உடலுக்கு அழிவும் இல்லாமல் இந்த உலகத்தையே ஆட்சி செய் என்று விட்டு தமது அருளை அடியவரின் உயிருக்கு கிரீடமாக வைத்து அருளி, இந்த உலகத்தையே ஆளுகின்ற அரச பதவியையும் தந்து அருளுகின்றார்.

பாடல் #1592: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

தானவ னாதிச் சொரூபத் துள்வந்திட்டு
வானச் சொரூபங் கனான்கு மகன்றற
வேனைய முத்திரை யீறாண்ட னனந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே.

விளக்கம்:

அடியவருக்கு இறைவன் தமது ஆதியில் இருக்கின்ற சுய ரூபமாகிய ஜோதியை அவரின் உள்ளத்திற்குள் வந்து வைத்து அருளுகின்றார். அப்போது இறைவனாகவே ஆகிவிட்ட அடியவரின் பஞ்ச கோசங்களாகிய சுய ரூபங்களில் அன்னம் பிராணன் மனம் விஞ்ஞானம் ஆகிய நான்கும் விலகிச் சென்று நீங்கி விட மீதி இருக்கின்ற ஆனந்த மய கோசத்தையே முத்திரையாக (ரூபம்) வைத்து அதையே தமக்கு எல்லையாக கொண்டு ஆண்டு அருளுகின்றான் குருவாக இருக்கின்ற இறைவன். அந்த குருநாதனாகிய இறைவன் தமது திருவடியை அடியவரின் தலை மேல் பாடல் #1590 இல் உள்ளபடி முன்னரே கிரீடமாக சூட்டி அடியவருக்குள் உறுதியாக ஸ்தாபித்தது பேருண்மையே ஆகும்.

பஞ்ச கோசங்கள்:

1. அன்னமய கோசம் - உணவால் தோன்றி உணவால் வளர்ந்து உணவின் மூலமாகிய மண்ணில் சிதைந்து அழிகிற உடல்.
2. பிராணமய கோசம் - மூச்சாக உள் வந்து உடலின் அனைத்து இயக்கங்களையும் செயல் படுத்துகின்ற காற்று.
3. மனோமய கோசம் - எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் ஆதாரமாக இருக்கின்ற மனம்.
4. விஞ்ஞானமய கோசம் - பகுத்தறிவும் சிந்தனைத் திறனும் கொண்டு இருக்கின்ற அறிவு.
5. ஆனந்தமய கோசம் - புலன்களுக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற பேரின்பம்.

பாடல் #1593: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு [குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை]

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போற் சிவமாதல் தீர்வு
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்திநற் சொல்லிறந் தோமே.

விளக்கம்:

பாடல் #1590 இல் உள்ளபடி இறைவனே குருவாக வந்து தமது திருவடியை எனது உள்ளத்திற்குள் வைத்த பிறகு பேச்சும் இல்லாமல், உணர்வும் இல்லாமல், உயிரும் பரம்பொருளும் வேறு வேறு எனும் நிலையும் இல்லாமல், நுரையும் அலையும் இல்லாத தெளிவான நீரை போல எனது மனமானது தெளிவு பெற்று சிவமாகவே உறுதியாக ஆகி, வரம்புகள் இல்லாத உலக இயக்கத்திற்கு காரணமாகிய சக்திகளாக ஆதியிலிருந்தே இருக்கின்ற பஞ்ச பூதங்களில் நிலம் நீர் காற்று நெருப்பு ஆகிய நான்கையும் கடந்து ஆகாயத்தில் இருக்கின்ற இறை சொரூபத்தை எனக்குள் இருத்தி நன்மை தீமை ஆகிய இரண்டு விதமான சொற்களுமே இறந்து போய்விட அசைவற்ற சமாதி நிலையில் இருந்தேன் யான்.

கருத்து: பஞ்ச பூதங்களில் நிலம் நீர் காற்று நெருப்பு ஆகிய நான்கிற்கும் உலக அளவில் வரையறுக்கப் பட்ட எல்லைகள் உண்டு. ஆனால் ஆகாயத்திற்கு எல்லையே இல்லை. அப்படி எல்லையே இல்லாத ஆகாயத்தில் பரந்து விரந்து இருக்கின்ற இறைவனது சொரூபத்தை எனது உள்ளத்திற்குள் இருத்தி எந்த விதமான எண்ணங்களும் அசைவுகளும் இல்லாத சமாதி நிலையில் இருந்தேன் என்று அருளுகின்றார்.

பாடல் #1594: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

குரவனு யிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்று
வுருகிட வென்னையங் குய்யக்கொண் டானே.

விளக்கம்:

இறைவனே குருவாக வந்து எனது உயிரின் மூன்று விதமான சொரூபங்களாகிய உருவம் அருவுருவம் அருவம் ஆகிய மூன்றையும் தம் வசமாக கை கொண்டு அரியதான பொருளாகிய எனது ஆன்மாவையே தமது முத்திரையாக எடுத்துக் கொண்டு அனைத்திலும் பெரியவனும் அனைத்திற்கும் தலைவனும் ஆகிய இறைவனின் திருவடிகளை எனக்குள் வைத்து குருநாதராகிய இறைவன் தனது அருளால் எனது பேச்சு முழுவதம் இல்லாமல் போகும் படி செய்து அவரின் அன்பில் உருகி விடும் படி செய்து தாம் இருக்கும் இடத்திற்கு செல்லுவதற்கான பக்குவத்தை அடையும் படி என்னை ஆட் கொண்டு அருளினான்.

குறிப்பு: உருவம் என்பது முழுவதுமாக கண்களால் காணும் படி உள்ள உடலாகும். அருவுருவம் என்பது ஒளியால் ஆன உடலாகும். அருவம் என்பது சூட்சுமத்தால் ஆன உடலாகும்.

பாடல் #1595: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற யென்னைச் சிவமாக்கு மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு
வாச்சப் புகழ்மாளத் தாடந்து மன்னுமே.

விளக்கம்:

குருநாதராக வந்த இறைவன் பேச்சே இல்லாத இன்பத்தில் பேரானந்த நிலையில் என்னை மூழ்க வைத்து மாசு மலங்கள் எதுவும் இல்லாத என்னை சிவமாகவே ஆகும் படி செய்து என்னை முழுவதுமாக ஆட்கொண்டு அருளி வெப்பம் இல்லாத தூய ஜோதி உருவத்தில் எம்மிடம் இருந்த மாயை அசுத்த மாயை சுத்த மாயை ஆகிய மூன்றையும் தம் வசமாகக் கை கொண்டு இந்த நிலை பெற்ற எனக்கு இந்த உலகத்தில் கிடைக்கின்ற புகழ்ச்சிகளில் நான் மயங்கி விடாமல் அந்த புகழ்ச்சிகள் அழிந்து போகும் படி தனது திருவடிகளை தந்து அருளி என்னை எப்போதும் நிலைபெற்று வாழும் படி செய்து விட்டார்.

பாடல் #1596: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

இதையத்து நாட்டத்து மென்றன் சிரத்தும்
பதியித்த வந்தப் பராபர னந்தி
கதிவைத்த வாறு மெய்காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே.

விளக்கம்:

எமது இதயத்தில் இருக்கின்ற விருப்பத்திலும் எமது தலையின் மேலும் தனது திருவடியை நீங்காமல் வைத்து அருளிய அந்த அசையா சக்தியாகிய பரம்பொருளாகவும் குருநாதராகவும் இருக்கின்ற இறைவன் யாம் முக்தி அடைவதற்காக வைத்து அருளிய வழியையும் உண்மைப் பொருளை எமக்கு காட்டி அருளிய வழியையும் இயல்பான வாழ்க்கையின் இறப்பு விதியை மாற்றி தம்மை வந்து அடைவதையே விதியாக வைத்து அருளிய வழியையும் எம்மால் வார்த்தைகளால் விவரித்து சொல்ல இயலாது.

பாடல் #1597: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு [குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை]

திருவடி வைத்தென் சிரத்தரு ணோக்கிப்
பெருவடி வைத்தந்தப் பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவடி மாற்றிடக் கண்டுகொண் டேனே.

விளக்கம்:

போற்றத்தக்க தமது திருவடிகளை எமது தலையின் மேல் வைத்து, தமது கனிவு கொண்ட அருள் பார்வையால் பார்த்து, அனைத்திலும் பெரியதான தமது திருவடியை எம்மேல் வைத்த அந்த பெருமைக்குரிய குருநாதராகிய இறைவனை, குருவின் வடிவத்தில் யாம் தரிசித்த தலைவனாகிய எமது இறைவன், இனி எப்போதும் கருவாக வந்து பிறக்கும் வழி இல்லாமல் போகும் படி செய்து அருளியதை யாம் கொண்டு கொண்டோமே.

பாடல் #1598: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல நீக்குந்
திருவடி ஞானந் திண்சித்தி முத்தியே.

விளக்கம்:

இறைவனின் போற்றத்தக்க திருவடிகளை எம் மேல் வைத்து அருளியதால் யாம் உணர்ந்த ஞானமே சிவமாகவே ஆக்கி விடும். அதுவே இறைவன் இருக்கின்ற இடத்திற்கு எம்மை கொண்டு சேர்க்கும். அதுவே எம்மை இந்த உலகச் சிறையில் வைத்திருக்க காரணமாகிய மலங்களை நீக்கி விடும். அந்த ஞானத்தால் முக்தியும் எமக்கு உறுதியாக கிடைத்து விடும்.

பாடல் #1599: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு [குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை]

மேல்வைத்த வாறுசெயா விடில்மேல் வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி யானவன்
றாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே.

விளக்கம்:

எமது தலையின் மேல் தமது திருவடியை இறைவன் வைத்து அருளிய முறையை செய்யாமல் இருந்திருந்தால் யான் மேலும் மேலும் சேர்ந்து கொள்ளும் வினைகளால் மாயனாகிய திருமால் மாயையால் வைத்த எண்ணங்களையே கொண்டு மாயத்திலேயே எமது வாழ்க்கை இருக்கும் படி ஆக்கிவிடும். எமது தலையில் அமிழ்தமாக இருக்கின்றவனும் எங்கும் படர்கின்ற ஒளி வடிவமாக இருப்பவனும் ஆகிய இறைவன் தமது திருவடியை எமது தலையின் மேல் வைத்து அருளிய வழிமுறையும் முக்திக்கான அனைத்து நலங்களையும் எமக்கு அருளிய வழிமுறையுமே எம்மை அப்படிப்பட்ட மாய வாழ்க்கையிலிருந்து காப்பாற்றியது.



பாடல் #1600: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு [குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை]

கழலார் கமலத் திருவடி யென்னு
நிழல்சேரப் பெற்றே னெடுமா லறியா
வழல்சேரு மங்கியு ளாதிப் பிரானுங்
குழல்சேரு மென்னுயிர் கூடுங் குலைத்தே.

விளக்கம்:

சிலம்புகளை அணிந்து கொண்டு இருக்கும் தாமரை மலர் போன்ற திருவடிகள் என்று உணரப் படுகின்ற நிழலோடு யானும் சேர்ந்து இருக்கும் படி இறைவனது திருவருளால் பெற்றேன். நீண்ட நெடும் அண்ணாமலையாக திருமாலாலும் அறிய முடியாத மிகப்பெரும் ஜோதியோடு சேருகின்ற எமக்குள் இருக்கின்ற ஜோதியின் உள்ளே இருக்கின்ற ஆதி தலைவனாகிய இறைவனோடு எமது உடலோடு சேர்ந்த தலை முடியுடன் எமது உயிரும் சேர்ந்து அவனோடு கூடி ஒன்றோடு ஒன்றாக சேர்ந்து இருக்கின்றோம்.

பாடல் #1601: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

முடிமன்ன ராய்மூ வுலகம தாள்வ
ரடிமன்ன ரின்பத் தளவில்லைக் கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்க ளீசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே.

விளக்கம்:

கிரீடத்தை சூடிக்கொண்டு இருக்கின்ற மன்னர்களாக இருப்பவர்கள் தேவ லோகம், பூலோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் இருக்கின்ற பல நாடுகளை ஆட்சி செய்வார்கள். ஆனால், இறைவனது திருவடிகளை தமது நெஞ்சத்திற்குள் நிலைபெற்று வைத்து இருக்கின்றவர்கள் அடைகின்ற பேரின்பத்திற்கு அளவு என்பதே இல்லை கேட்டுக் கொள்ளுங்கள். ஆகவே மலங்கள் இருப்பதாலேயே கிரீடத்தை சூடிக்கொண்டு இருக்கின்ற மன்னர்களாக நிற்கின்ற தேவர்கள் கூட இறைவனின் திருவடிகளை தமது நெஞ்சத்திற்குள் குடி வைத்த மன்னர்களாக இருந்தால் எந்த விதமான மலங்களும் இல்லாமல் நிற்பார்கள்.

கருத்து: தேவர்கள் கன்மம் மாயை அனைத்தும் நீங்கப்பெற்று நான் என்ற எண்ணம் நீங்கி ஞானம் அடைந்தாலும் இறைவனுடன் கலக்காமல் தனிப்பட்ட தனது பெயரினால் அழைக்கப்படுவதினால் அவர்களுக்கு ஆணவமலம் இருக்கின்றது. அவர்கள் இறைவனின் திருவடிகளை தமது நெஞ்சத்திற்குள் நிலைபெற்று இருக்கும் படி செய்து விட்டால் அந்த மலமும் நீங்கி எந்தவிதமான மலங்களும் இல்லாமல் இருப்பார்கள்.

பாடல் #1602: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

வைத்தே னடிகண் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே யெரியும் புலன்வழி போகாம
லெய்த்தே னுழலு மிருவினை மாற்றிடு
மெய்த்தே னறிந்தே னவ்வேதத்தி னந்தமே.

விளக்கம்:

இறைவனை திருவடிகளை எனது கண்களிலும் மனதிற்கு உள்ளேயும் யான் வைத்துக் கொண்டேன். அதனால் உண்மையை மறைத்து பொய்யான ஆசைகளையே அதிகமாக்குகின்ற ஐந்து புலன்களின் வழியே மனம் போய் விடாமல் ஆசைகளற்ற மேல் நிலைக்கு எடுத்து செல்லும். அதனால் பிறவிச் சுழலில் சுழன்று கொண்டே இருப்பதற்கு காரணமாகிய நன்மை தீமை ஆகிய இரண்டு விதமான வினைகளையும் மாற்றிடும் உண்மையான பேரின்பத்தைக் கொடுக்கின்ற தேனாக வேதங்களின் எல்லையாக இருக்கின்ற பரம் பொருளாகிய இறைவனை யான் அறிந்து கொண்டேன்.

பாடல் #1603: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

அடிசார லாமண்ணல் பாத மிரண்டு
முடிசார வைத்தனர் முன்னே முனிவர்
படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளங்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.

விளக்கம்:

இறைவனின் பாதங்கள் இரண்டையும் தமது தலையின் மேல் சேர்ந்து இருக்கும்படி வைத்து இறைவனின் திருவடிகளையே சார்ந்து இருக்கின்றார்கள் ஆதிகாலத்தில் முற்றும் துறந்த முனிவர்கள். பழம் பெரும் இறைவனின் அந்த திருவடிகளில் இருந்து அவர்கள் வெள்ளம் போல் பெற்ற அருளை உலக உயிர்களின் பக்குவத்துக்கு ஏற்றபடி படிப் படியாக அவர்களின் அனுபவிக்கும் படி படி கொடுக்கின்றார்கள் அவர்கள். இறைவனின் திருவடிகளை தங்களின் தலையில் குடி வைத்து அதையே சார்ந்து இருக்கின்ற வழிமுறையில் ஒன்றாக கூடி நிற்கின்ற அனைத்து முனிவர்களின் கொள்கையும் இதுவே ஆகும்.

கருத்து: வெள்ளம் போன்ற இறைவனின் அருளை அப்படியே வழங்கினால் தாங்கிக் கொள்ள முடியாத உயிர்களுக்கு அவர்கள் அனுபவிக்க வேண்டிய ஆசைகளுக்கு ஏற்றபடி படிப்படியாக அனுபவிக்கும் படி மாற்றிக் கொடுத்து இறைவனின் திருவடிகளையே சார்ந்து இருக்கின்றார்கள் முற்றும் துறந்த முனிவர்கள். திருவடி பேற்றை அடைந்த இவர்களின் தன்மையை இந்தப் பாடலில் திருமூலர் அருளுகின்றார்.

பாடல் #1604: ஆறாம் தந்திரம் - 2. திருவடிப் பேறு (குருவாக வந்த இறைவனின் திருவடிகளால் பெறும் நன்மை)

மந்திர மாவது மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவது
மெந்தை பிரான்ற னிணையடி தானே.

விளக்கம்:

அனைத்து விதமான மந்திரங்களாக இருப்பதும் அனைத்து விதமான நோய்களையும் தீர்க்கின்ற மாபெரும் மருந்தாக இருப்பதும் தாந்திரீகம் எனும் இறைவனை அடைவதற்கான வித்தைகளாக இருப்பதும் உலகத்தில் உள்ள அனைத்து விதமான தான தர்மங்களாக இருப்பதும் அழுக்கை நீக்கிய பேரழகாக இருப்பதும் இறைவனை அடைவதற்கு தூய்மையான வழி முறைகளாக இருப்பதும் எமது தந்தையும் அனைத்திற்கும் தலைவனும் ஆகிய இறைவனின் ஒன்றாக சேர்ந்தே இருக்கின்ற திருவடிகளே ஆகும்.

உள் விளக்கம்: மாயையால் மூடியிருக்கின்ற மனதை திறக்கின்ற திறவு கோலாக இருப்பதும் பிறவி பிணி எனும் நோயை தீர்க்கின்ற மாபெரும் மருந்தாக இருப்பதும் இறைவனை விரைவில் அடைவதற்கான வழிகளாக இருப்பதும் அடியவர்கள் செய்கின்ற அனைத்து விதமான தான தர்மங்களாக இருப்பதும் பிறவி எனும் அழுக்கை நீக்கிய சுந்தரமான அமரர்களாக இருப்பதும் மும் மலங்களை நீக்கி தூய்மை அடைவதற்கான வழி முறையாக இருப்பதும் இறைவனின் திருவடிகளே ஆகும்.

ஞாதுரு ஞான ஞேயம் முன்னுரை:

பார்க்கின்றவன் என்பது சாதகரை குறிக்கும். சாதகர் தமது ஆன்மாவை மாயை நீங்கிய ஞானத்தோடு பார்க்கும் போது அது சிவமாகத் தெரிகின்றது. அதுவே ஞானத்தின் மூலம் பார்க்கப் படுகின்ற பொருளாகும். தமது ஆன்மா சிவமாக இருப்பதை ஞானத்தினால் பார்த்து உணர்ந்த சாதகருக்கு 'நான்' என்ற அகங்காரம் நீங்கி விடுகின்றது.

பாடல் #1605: ஆறாம் தந்திரம் – 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

நீங்கார் சிவானந்த நேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படராப் படரினு
மாங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா வமுத நிலைபெற லாமே.

விளக்கம்:

திருவடி பேற்றை பெற்ற அடியவர்கள் நீங்காமல் சிவப் பரம்பொருளின் பேரானந்தத்தில் தூய்மையான அன்பிலே நின்று இருப்பார்கள். அப்படி நிற்கின்ற பாவனை விட்டுவிடாமல் இருக்கும் போது பாசத் தளைகள் மூடி விடாமல் இருக்கும். பிறகு உலக நன்மைக்காக செயல்கள் செய்யும் போது பாசம் வந்தால் கூட நான் என்கின்ற அகங்காரம் நீங்கி விட்டதால் பாசத் தளைகளால் மறுபடியும் மாயையில் மூழ்கிவிடாத நிலையிலேயே நிலைத்து நிற்பார்கள். அப்போது எப்போதும் நீங்காத சமாதி நிலையில் அமிழ்தத்தை பருகிக் கொண்டே பேரின்பத்தில் திளைத்து நிற்கின்ற நிலையை அவர்களால் பெற முடியும்.

பாடல் #1606: ஆறாம் தந்திரம் – 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நீங்கிடும்
ஞேயத்தில் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவ
ராயத்தி னின்ற வறிவறி வோரே.

விளக்கம்:

ஞானத்தினால் பார்க்கப் படுகின்ற ஆன்மாவை சிவப் பரம்பொருளாக உணர்ந்து நின்றவர்களுக்கு தாமே சிவம் என்பதை உணர்கின்ற ஞானத்தை ஆராய்கின்ற அறிவு நீங்கி விடும். ஞானத்தினால் பார்க்கப் படுகின்ற ஆன்மாவில் சிவப் பரம்பொருளை பார்க்கின்ற உருவமே பார்க்கப்படுகின்ற பரம்பொருளில் முக்தி நிலை ஆகும். ஞானத்தினால் பார்க்கப் படுகின்ற ஆன்மாவாக உள்ள சிவப் பரம்பொருளில் பரம்பொருளாக இருக்கின்ற பரமாத்மாவோடு சேர்ந்து இருக்கின்ற அடியவர் கூட்டத்துடன் தாமும் சேர்ந்து நிற்கின்ற அறிவை அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள்.

பாடல் #1607: ஆறாம் தந்திரம் – 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென் றபூவை யவனடி சாத்தினால்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே.

விளக்கம்:

தான் என்று தனியாகவும் இறைவன் என்று தனியாகவும் இரண்டு விதமாக பிரித்து வைத்து பார்க்கின்ற தத்துவமானது, தான் என்று எண்ணப்படுகின்ற பொருள் இறைவன் என்று எண்ணப்படுகின்ற பொருள் ஆகிய இரண்டையும் தமக்குள்ளேயே கண்டு உணர்ந்து, தான் என்று எண்ணப்படுகின்ற பொருளாகிய ஆன்மாவை ஒரு பூவாக பாவித்து தமக்குள் இருக்கின்ற இறைவனின் திருவடிகளில் அதை சாத்தி வணங்கித் தொழுதால், அடியவர் நான் என்று எதை எண்ணுகின்றாரோ அதை இறைவன் என்று உணர்வதே நல்லதான ஒன்றாக அன்றிலிருந்தே உணர்ந்து கொள்ளுவார்.

பாடல் #1608: ஆறாம் தந்திரம் - 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

வைச்சன வாறாறு மகற்றியே வைத்து
மெச்ச பரமன்றன் வியாத்தும் மேலிட்டு
நிச்சய மாகச் சிவமாக்கி நேயத்தா
லச்சங் கெடுத்தென்னை யாண்டன னந்தியே.

விளக்கம்:

பிறவி எடுக்கும் போது உடலில் இறைவன் வைத்து அருளிய முப்பத்து ஆறு தத்துவங்களையும் உடலிலிருந்து நீக்கி வைத்து அனைத்திற்கும் மேலான பொருள் என்று வியக்கத் தகுந்த பரம்பொருளாகிய இறைவன் தன்னை போலவே அனைத்திலும் வியாபித்து இருக்கின்ற மேலான நிலைக்கு என்னை கொண்டு வந்து உறுதியாக என்னை சிவப் பரம்பொருளாகவே ஆக்கி அளவில்லாத தம்முடைய அன்பினால் இனி பிறவி எடுத்து விடுவோமோ என்கின்ற எனது பயத்தை நீக்கி என்னை தமது அடிமையாக ஆக்கி ஆட்கொண்டு அருளினார் குருநாதராக வந்த இறைவன்.

பாடல் #1609: ஆறாம் தந்திரம் - 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

முன்னை யறிவறி யாதவம் மூடர்போற்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
றன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்
தென்னை யறிவித் திருந்தன னந்தியே.

விளக்கம்:

இறைவனே குருவாக வருவதற்கு முன்பு அவனை அறிகின்ற அறிவை அறியாமல் பந்த பாசங்களில் சிக்கிக் கொண்டு மாயையிலேயே உழன்று கொண்டு இருக்கின்ற இந்த உலகத்து முட்டாள்களைப் போலவே யானும் இருந்தேன். என்னை தடுத்து ஆட்கொள்வதற்காக இறைவனே குருவாக வந்த பிறகு அவனை அறிந்து இருக்கின்ற ஞானத்தையும் அவனை அறியாமல் இருக்கின்ற அறியாமையையும் பிரித்து காட்டி அருளினான். அதன் பிறகு எனக்குள் இருக்கும் இறைவனை அறிந்து கொள்ளும் படி செய்து அவரைப் போலவே என்னையும் பரம்பொருளாக ஆக்கி தமது சிவத் தன்மையை யானும் அறிந்து கொள்ளும் படி செய்து என்னுடன் வீற்றிருந்தார் குருநாதராக வந்த இறைவன்.

பாடல் #1610: ஆறாம் தந்திரம் - 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத போதமுங் கூடாத கூட்டமு
நாணாத நாணமு நாதாந்த போதமுங்
காணா யெனவந்து காட்டின னந்தியே.

விளக்கம்:

இதுவரை இறைவனை கண்டு அறியாத ஊனக் கண்ணை மாற்றி காண வைக்கின்ற ஞானக் கண்ணையும் அதனுடன் இறைவன் என்று ஒருவர் இருப்பதையே அறியாமல் இருக்கின்ற நிலையை மாற்றுகின்ற அறிவையும் தன்னுடைய நிலையிலிருந்து எப்போதும் மாறாத ஞானத்தையும் இறைவனோடு தாம் சேர்ந்து இருக்கின்றோம் என்பதையே அறியாமல் இருந்த எண்ணத்தை மாற்றி அவனோடு சேர்ந்து இருப்பதையும் இறைவனைப் பற்றிக் கொள்ளாமல் உலகப் பற்றுக்களிலேயே இருந்த மனதை மாற்றி இறைவனை பற்றிக் கொள்வதையும் நாதத்தின் எல்லையாக இருக்கின்ற ஞானத்தையும் இதுவரை அறியாமல் இருக்கின்றாய் என்று கருணையோடு வந்து என்னை தடுத்து ஆட்கொண்டு காட்டி அறிய வைத்தான் குருநாதனாக வந்த இறைவன்.

பாடல் #1611: ஆறாம் தந்திரம் – 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடு
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியு முன்னிற்கு
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமு முன்னுமே.

விளக்கம்:

பேச்சுகளும் எண்ணங்களும் அற்ற மோன நிலை கைகூடும் படி அடைந்தவர்களுக்கு முக்தி நிலையும் கை கூடும். அனைத்து விதமான சித்திகளும் அவர்களுக்குள் நிலைத்து நிற்கும். உடல் அசைவுகளால் பேசுகின்ற மொழி கூட அவர்களை விட்டு முழுவதும் நீங்கி விடுவதை அவர்கள் காணலாம். உலகத்தில் இறைவன் செய்கின்ற படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்து விதமான தொழில்களையும் தமக்குள்ளேயே அவர்களால் உணர முடியும்.

பாடல் #1612: ஆறாம் தந்திரம் – 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால்
வைத்த கலைகாலை நான்மடங் கான்மாற்றி
யுய்த்த தவத்தாந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே.

விளக்கம்:

மூன்று திரைகளாகிய மாயையால் மூடியிருக்கின்ற பார்க்கின்றவன், பார்க்கும் ஞானம், பார்க்கப்படும் பொருள் ஆகிய மூன்றையும் மூடியிருக்கின்ற மாயை முடிந்து விடுவதற்கு இடகலை பிங்கலை சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளின் மூலம் இறைவன் பிறக்கும் போதே இயல்பாக வைத்து அருளிய மூச்சுக்காற்றின் போக்குவரத்தை இயல்பான கீழ் நிலையில் இருந்து நான்கு விரற்கடை அளவிற்கு மேல் நோக்கி மாற்றி உச்சியிலிருக்கும் சகஸ்ரரதளத்திற்கு கொண்டு சென்று சேர்த்து செய்கின்ற தவத்தில் முழுமை பெற்ற நிலையில் சாதகரோடு ஒன்றி இருக்கின்ற குருநாதராகிய இறைவனின் திருவடிகளைப் பெற்று பிறவிக்கு காரணமாகிய மூன்று மலங்களையும் அதை சார்ந்த அனைத்து பற்றுக்களையும் அறுத்து விட்டவர்கள் இனி பிறக்கவோ இறக்கவோ மாட்டார்கள்.

பாடல் #1613: ஆறாம் தந்திரம் - 3. ஞாதுரு ஞான ஞேயம் [பார்க்கின்றவனும் ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருளும்]

மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி
பாலித்த முத்திரைப் பற்றுப் பரஞான
மாலித்த நாட்டமே ஞேயம் பகுத்தற்ற
மூலச் சொரூபன் மொழிஞா துருவனே.

விளக்கம்:

அனைத்திற்கும் மேலே இருக்கின்ற இறைவனின் சொரூபங்கள் ஆக இருக்கின்ற பார்க்கின்றவன், பார்க்கும் ஞானம், பார்க்கப்படும் பொருள் ஆகிய மூன்று விதமான தத்துவங்களுக்கும் மேலான சக்தியாகிய இறைவன் தம்முடைய திருவருளால் அருளிய இந்த மூன்று திரைகளையும் தெரிந்து கொள்ளும் பரம் பொருளின் பேரறிவு ஞானம் கிடைக்கப் பெறுவார். அந்த ஞானத்தின் மூலம் தமக்குள் ஆனந்த வடிவாக இருக்கின்ற சிவப் பரம்பொருளை பார்த்து உணர்ந்து அதுவே ஞானத்தால் பார்க்கப் படுகின்ற பொருள் பார்க்கின்றவன் என்று தனித்தனியாக பிரிந்து இருக்கின்ற நிலை இல்லாமல் போய் அனைத்திற்கும் மூலமாகிய இறைவனின் சொரூபமாக இருக்கின்ற பொருள் பார்க்கின்றவனாக இருக்கின்ற தாமே என்பதை உணர்ந்து கொள்ளுவார்கள்.

கருத்து: பார்க்கின்றவனாகிய சாதகர் தமக்குள் இருக்கின்ற பரம்பொருளை பார்ப்பதற்கான ஞானத்தை இறைவனின் திருவருளால் பெற்று தாம் பார்க்கின்ற அந்த மூலப் பரம்பொருளாக தாமே இருப்பதை உணர்ந்து கொள்வார்.

பாடல் #1614: ஆறாம் தந்திரம் - 4. துறவு (அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை)

இறப்பும் பிறப்பு மிருமையு நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பதி காட்டு மமரர் பிரானே.

விளக்கம்:

இறைவனின் திருவருளால் பெற்ற ஞானத்தின் மூலம் இறைவனை உணர்ந்து மும்மலங்களையும் அறுத்து இறப்பு பிறப்பு ஆகிய இரண்டு விதமான தன்மைகளும் நீங்கி விட அனைத்தையும் விட்டு விலகி நிற்கின்ற துறவாகிய தவ நிலையில் சாதகர் கண்ட ஜோதி மயமாகிய இறைவனை எப்போதும் மறந்து விடாமல் தமது வாயால் சொல்லுவதெல்லாம் இறைவனின் சொல்லாகவே சொல்லுபவர்களுக்கு தர்மம் இருக்கின்ற இடமாகிய சிவலோகத்தை காட்டி அருளுவான் அமரர்களின் தலைவனாகிய இறைவன்.

பாடல் #1615: ஆறாம் தந்திரம் - 4. துறவு (அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை)

பிறந்து மிறந்தும் பல்பேதைமை யாலே
மறந்து மலவிரு ணீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர் பருவத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே.

விளக்கம்:

பல முறைகள் பிறவி எடுத்து எடுத்து இறக்கின்ற பிறவிச் சுழலில் இருந்து விடுதலை பெறுகின்ற அறிவு இல்லாததால் தனக்குள் இறைவன் இருப்பதையே மறந்து மாயையாகிய மலத்தின் இருளில் இருக்கின்றார்கள். அப்போது அவர்களை விட்டு அந்த இருளானது நீங்கி மறைந்து போகும் படி சிறப்பான இறைவனின் பேரருளை அவர்கள் அடைகின்ற காலத்தில் அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற துறவாகிய தவ நிலையில் இருக்கின்ற உயிர்களுக்கு இறைவனுடைய பேரருளானது பிரகாசமாக திகழ்கின்ற சுடர் ஒளியாக விளங்கும்.

பாடல் #1616: ஆறாம் தந்திரம் - 4. துறவு (அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை)

அறவன் பிறப்பிலி யாரு மில்லாதா
னுறைவது காட்டக முண்பது பிச்சை
துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.

விளக்கம்:

அனைத்தையும் விட்டு விலகி இருப்பவனும், பிறப்பு என்பதே இல்லாதவனும், தனக்கு சொந்தமானவர்கள் என்று எவரும் இல்லாதவனும் ஆகிய இறைவன் தமக்குள்ளே வீற்றிருக்கின்ற இடத்தை உணர்வதற்கு உள்ளுக்குள்ளே இருக்கின்ற பொருளாகிய ஆன்மாவானது தமக்குள் ஆராய்ந்து அறிந்து உணர்ந்து கொள்ளுகின்ற ஞானத்தினால் தமக்குள் அனைத்தையும் துறந்து வீற்றிருக்கின்ற மாபெரும் துறவியாகிய இறைவனையும் பார்த்தீர்கள். அவனைப் போலவே அனைத்தையும் துறந்து இருக்கின்ற அடியவர்கள் தம்முடைய பிறவிகளை அறுத்து நீக்கிவிடும் இறைவனும் அவனே என்பதையும் துறவிகள் காண்பார்கள்.

கருத்து: தமக்குள்ளே மறைந்து இருக்கின்ற இறைவனை உணர்வதற்கு ஆன்மாவானது ஞானத்தை அறிந்து உணர்ந்து தகுதி பெறுகின்றது. அப்படி தகுதி பெற்று தமக்குள் உணர்ந்த இறைவனைப் போலவே நீங்களும் அனைத்தையும் துறந்து ஞானத்தை பற்றிக் கொண்டு இருந்தால் உங்களின் பிறவிகளை இறைவன் அறுத்து விடுவதையும் காண்பீர்கள்.

பாடல் #1617: ஆறாம் தந்திரம் - 4. துறவு (அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை)

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தா
னெறியில் வழுவில் நெருஞ்சில் முட்பாயு
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியில் நெருஞ்சில் முட்பாயகில் லாவே.

விளக்கம்:

அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற துறவறத்தை மேற்கொள்ளுபவர்கள் கடை பிடிக்க வேண்டிய வழிமுறைகளை படைத்த இறைவனே அந்த வழிமுறைகளை சரியாக கடைபிடிக்காத போது அதை உணர்த்துவதற்கு கடினமான முள்ளை போன்ற துன்பங்களையும் படைத்தான். கடை பிடிக்க வேண்டிய வழிமுறைகளில் இருந்து சிறிது விலகி நடந்தாலும் அந்த கடினமான முள் போன்ற துன்பங்களும் பாய்ந்து சாதகருக்கு அவர்கள் வழி தவறி செல்வதை நினைவூட்டும். சிறுதளவும் கூட தாம் கடை பிடிக்க வேண்டிய வழிமுறைகளில் இருந்து விலகி விடாமல் செயல் பட முடிந்தவர்களுக்கு அவர்கள் கடை படிக்கின்ற வழிமுறைகளில் ஒரு பொழுதும் கடினமான முள்கள் போன்ற துன்பங்கள் பாய்வது இருக்காது.

பாடல் #1618: ஆறாம் தந்திரம் - 4. துறவு [அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை]

கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரு
நாடி வளைந்தது நான் கடைவேனல
னாடல் விடையுடை யண்ணல் திருவடி
கூடுந் தவஞ்செய்த கொள்கைதந் தானே.

விளக்கம்:

பிறவிக்கு காரணமாக இருக்கின்ற வினைகளையும் அந்த வினைகளை தீர்ப்பதற்கு செய்ய வேண்டிய கடமைகளையும் இறைவனிடம் பிறவி எடுப்பதற்கு முன்பே கேட்டுக் கொண்டு பிறவியோடு கூட வந்த ஐந்து புலன்களும் அதனதன் கடமையை செய்வதற்கு ஏற்றபடி ஆசைகளின் வழியே வளைந்து என்னை நடக்க வைக்கின்றதை யான் கடைபிடிப்பது இல்லை. தில்லையில் ஆடுகின்ற விடை வாகனமாகிய நந்தியை உடையவனாகிய இறைவனின் மதிப்பிற்குரிய திருவடிகளை சென்று அடைகின்ற தவமுறையான இந்த செயலை செய்கின்ற கொள்கையை இறைவன் எமக்குத் தந்து அருளினான்.

பாடல் #1619: ஆறாம் தந்திரம் - 4. துறவு [அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை]

உழவனு ழவுழ வானம் வழங்க
வுழவனு ழவினிற் பூத்த குவளை
யுழவனு ழத்தியர் கண்ணொக்கு மென்றிட்
டுழவன தனையுழ வொழிந் தானே.

விளக்கம்:

பாடல் #1618 இல் உள்ளபடி இறைவன் அருளிய துறவு முறை கொள்கையை கடைபிடிக்கின்ற உழவனாகிய துறவி தாம் கடைபிடிக்கின்ற கொள்கையில் சாதகம் செய்ய செய்ய ஆகாயத்திலிருந்து இறைவனின் அருளானது மழை போல் அவருக்கு கிடைக்கின்றது. அப்போது உழவனாகிய துறவி செய்த உழவாகிய சாதனையில் இறைவனது அருளால் கிடைத்த பக்குவத்தில் மேல் நிலைக்கு செல்ல செல்ல அவரது குண்டலினி சக்தியானது சகஸ்ரதளத்திற்கு ஏறிச் சென்று அங்கே உள்ள ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரை மலரச் செய்கின்றது. அதன் பிறகு உழவனாகிய துறவி தமது சகஸ்ரதளத்தில் தரிசித்த இறை சக்திக்கு ஒப்பாக தமது பக்குவம் இருக்கின்றது என்று அதை தமது சமாதி நிலைக்கு தொடக்கமாக கொண்டு தொடங்கி அந்த சக்தியைக் கொண்டே தான் செய்கின்ற கொள்கையை விட்டு தான் என்கின்ற உணர்வே இல்லாமல் அனைத்தையும் விட்டு விலகி சமாதி நிலையிலேயே வீற்றிருப்பார்.

பாடல் #1620: ஆறாம் தந்திரம் - 4. துறவு [அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை]

மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூறுவன்
நாள்துறந் தார்க்கவ னண்ப னவாவலி
கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்துறந் தார்க்கே பதஞ்செய்ய லாமே.

விளக்கம்:

பாடல் #1619 இல் உள்ளபடி துறவின் சமாதியாகிய மேலான நிலையில் தான் எனும் உணர்வை விட்டு விலகி இருக்கின்ற துறவிகளுக்கு அனைத்தையும் காத்து அருளுபவனாகிய இறைவன் உண்மையை காண்பித்து உணர வைக்கின்ற ஒளியாக உள்ளுக்குள் இருந்து சொல்லிக் கொடுத்து வழி நடத்துவான். அதன் படியே கடை பிடித்து தமது வாழ்நாளை விட்டு விலகி இருக்கின்ற துறவிகளுக்கு அந்த இறைவனே உற்ற நண்பனாக இருப்பான். ஆசைகள் எனும் வலிமை மிக்க மாய இருளை விட்டு விலகி இருக்கின்ற துறவிகளுக்கு அந்த இறைவன் ஞானமாகிய நெற்றிக் கண்ணாகவே நின்று அருளுவான். அவன் காட்டிய ஞான வழியில் உலகத்தையும் உலக பற்றுக்களையும் விட்டு விலகி இருக்கின்ற துறவிகளுக்கே இறை நிலையை அடையும் பக்குவத்தை செய்து கொடுத்து அருளுவான் இறைவன்.

பாடல் #1621: ஆறாம் தந்திரம் - 4. துறவு (அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை)

நாகமு மொன்று படமைந்தி னாலது
போகமாழ் புற்றிற் பொருந்தி நிறைந்தது
வாக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந்
தேக படஞ்செய் துடம்பிட லாமே.

விளக்கம்:

உயிர்களின் உடல் ஒன்று அதன் உணர்வுகள் பார்த்தல் கேட்டல் சுவைத்தல் மணத்தல் உணர்தல் ஆகிய ஐந்து விதமான புலன்களால் கட்டி இழுக்கப்பட்டு அதன் மூலம் உடல் அனுபவிக்கின்ற இன்பத்திலேயே ஆழ்ந்து ஆசைகளாகிய புற்றில் பொருந்தி அதிலேயே வாழ்க்கை முழுவதும் நிறைந்து இருக்கின்றது. அதனால் தூல உடல் சூட்சும மனம் ஆகிய இரண்டும் தமது ஆசைகளின் வழியே படம் விரித்து ஆடுகின்ற பாம்பைப் போல ஆடி வாழ்க்கை ஒழிந்து போகின்றது. இதை மாற்ற ஐந்து புலன்களையும் ஒரே உடலாகிய மனம் அடக்கி ஆளும் படி செய்து அதை தமது உடலின் கட்டுப் பாட்டில் வைத்து தியானத்தில் வீற்றிருக்கலாம். இந்த நிலையே துறவு ஆகும்.

பாடல் #1622: ஆறாம் தந்திரம் - 4. துறவு [அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை]

அகன்றார் வழிமுத லாதிப் பிரானு
மிவன்றா னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகு
நயன்றான் வரும்வழி நாமறி யோமே.

விளக்கம்:

அனைத்தையும் விட்டு விலகி நிற்கின்ற துறவிகள் தாம் செல்லுகின்ற வழியில் மேன்மை நிலையை அடைந்த அந்த கணம் முதலே ஆதியிலிருந்தே அனைத்திற்கும் தலைவனாக இருக்கின்ற இறைவன் இந்த துறவியே தாம் தான் என்று துறவியாகவே நின்றாலும் ஜீவாத்மா போன்ற எளியவன் இல்லை. பரமாத்மாவாகவே இருக்கின்றான். அந்த பரமாத்மாவாகிய சிவனே தான் பல பல விதமான ஜீவாத்மாக்களாகவும் இருக்கின்றான். ஆனாலும் அவன் துறவிகளிடத்தில் விரும்பி தாமே வருகின்ற வழி முறையை நாம் அறிவது இல்லை.

கருத்து:

அனைத்து உயிர்களுக்குள்ளும் இறைவன் இருக்கின்றான் என்றாலும் அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற உயிர்களுக்குள் இறைவன் தமது பரமாத்ம நிலையிலியே விருப்பத்தோடு வந்து வீற்றிருக்கின்றான்.

பாடல் #1623: ஆறாம் தந்திரம் - 4. துறவு [அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற தவ நிலை]

தூம்பு துறந்தன வொன்பது வாய்தலு
மாம்பற் குழியி லகஞ்சுழிப் பட்டது
வேம்பேறி நோக்கினென் மீகாமன் கூறையிற்
கூம்பேறிக் கோயில் பழுக்கின்ற வாறே.

விளக்கம்:

இதுவரை துன்பக் குழியில் ஆன்மாவனது தனது கர்மங்களை அனுபவிக்கின்ற வாழ்க்கை சுழலிலேயே அகப் பட்டுக் கொண்டு இருந்தது. அனைத்தையும் விட்டு விலகி துறவு எனும் தவ நிலையில் மேன்மை நிலையை அடையும் போது தமது உடலில் உள்ள இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசிகள், வாய், கருவாய், எருவாய் ஆகிய ஒன்பது துளைகளாகிய கர்மங்களின் செயல்களை துறந்து விடுகின்றது. அதன் பிறகு பிறகு சுழுமுனை நாடியின் வழியே குண்டலினி சக்தியானது மேல் நோக்கி ஏறி பார்க்கும் போது அங்கே அவரது ஆன்மாவை காக்கின்றவனாகிய இறைவனை அவரது ஆன்மாவை மூடியிருந்த திரையை விலக்கிப் பார்த்து சுழுமுனையின் உச்சித் துளைக்கு மேலே இருக்கின்ற சகஸ்ரதளத்தில் ஏறி அங்கே கோயில் கொண்டு வீற்றிருந்து முக்தியை அளிக்கின்ற பேரோளியாகிய இறைவனை அடைகின்ற வழி அவருக்கு கிடைத்தது.

பாடல் #1624: ஆறாம் தந்திரம் - 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

ஒடுங்கி நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
யிடும்பையு மில்லை யிராப்பக லில்லைக்
கடும்பசி யில்லைக் கற்றுவிட் டோர்க்கே.

விளக்கம்:

ஆசைகளும் புலன்களும் ஒன்பது வாயில்களின் வழி நடக்கின்ற கர்மங்களும் ஒடுங்கி இறைவனை பற்றிய நினைவிலேயே இருக்கின்ற நிலையை பெற்ற உத்தமர்களான தவசிகளின் உள்ளமானது எதற்காகவும் அச்சப் படுவது இல்லை. இறப்பு என்பது அவருக்கு இல்லை. துன்பம் என்பது அவருக்கு இல்லை. இரவு பகல் எனும் கால வேறுபாடுகள் அவருக்கு இல்லை. கடுமையான பசி தாகம் ஆகிய உணர்வுகள் அவருக்கு இல்லை. இவை எல்லாம் உலக அறிவை கற்று அதை விட்டு விட்டு உண்மை அறிவை பற்றி இருக்கின்ற தவசிகளின் நிலையாகும்.

பாடல் #1625: ஆறாம் தந்திரம் - 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையு
மம்மாய வனருள் பெற்றதவற் கல்லா
திம்மா தவத்தி னியல்பறி யாரே.

விளக்கம்:

எமது உடல் உயிரோடு சேர்ந்து இருக்கின்ற ஆன்மா மற்றும் யாம் இருக்கின்ற உலகம் ஆகிய இரண்டு இடத்தின் மூலத்தையும் செம்மையாகிய மாபெரும் தவத்தினை செய்கின்ற செயலின் பெருமையையும் அந்த மாயவனாக இருக்கின்ற இறைவனின் திருவருளை பெற்று தவ நிலையில் இருப்பவர்களைத் தவிர இந்த மாபெரும் தவத்தின் இயல்பை வேறு எவரும் அறிய மாட்டார்கள்.

பாடல் #1626: ஆறாம் தந்திரம் - 5. தவம் (துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்)

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்போடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவத் தோர்கள்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே.

விளக்கம்:

பிறவி எதற்காக எடுத்து வந்தோம் என்பதை அறியாமல் இந்த உலகத்தில் உயிர் வாழ்வதற்கு தேவையான பலவற்றை பிச்சையாகவே பெற்று வாழ்கின்ற மனிதர்கள் மாயையில் இருப்பதால் தங்களின் உலக வாழ்க்கைக்கு சிறப்பானது என்று ஆசைப்பட்டு வேண்டிய செல்வத்தையே இறைவனிடம் கேட்டு பெறுகின்றார்கள். ஆனால் இறைவனின் திருவருளால் மாயை இல்லாதவராகிய மாபெரும் தவத்தை செய்தவர்கள் இனி பிறவி எடுக்கின்ற நிலையையே நீக்கி விடுகின்ற பெருமையை பெற்றவர்கள் ஆவார்கள்.

பாடல் #1627: ஆறாம் தந்திரம் - 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

இருந்து வருந்தி யெழிற்றவஞ் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
யிருந்திந் திரனே யெவரே வரினுந்
திருந்துந் தன்சிந்தை சிவனவன் பாலே.

விளக்கம்:

தியானத்தில் வீற்றிருந்து தமது உடலை வருத்திக் கொண்டு அருமையான தவத்தை செய்கின்ற தவசிகள் பெருமை மிக்க தன்மையை கொண்டவர்கள் ஆவார்கள். அவர்களின் தவ நிலையை கலைக்க வேண்டும் என்று அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு தேவர்களின் தலைவனாகிய இந்திரனே ஆனாலும் அல்லது அவரை விட வலிமை பெற்ற யார் வந்து முயற்சி செய்தாலும் எதனாலும் மாறாத பண்பட்ட மேன்மையான அவர்களின் சிந்தையானது சிவப் பரம்பொருளாகிய இறைவனின் மேல் மட்டுமே இருக்கும்.

பாடல் #1628: ஆறாம் தந்திரம் – 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

கரந்துங் கரந்திலன் கண்ணகத் தொன்றான்
பரந்த சடையன் பசும்பொன் னிறத்த
னருந்தவர்க் கல்லா லணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.

விளக்கம்:

மாயையினால் மறைந்து இருந்தாலும் மாயையை வென்ற தவத்தோர்களுக்கு மறைந்து இல்லாமல் இருப்பவன் அவன் கண்ணிற்கு உள்ளே ஒன்றி இல்லாமல் மனதோடு ஒன்றி இருக்கின்ற இறைவன். அவன் அருமையான தவத்தை செய்தவர்களுக்கு அல்லாமல் வேறு யாராலும் நெருங்கி வருவதற்கு முடியாதவனாக இருக்கின்றான். அப்படி அருமையான தவத்தை செய்து மனதோடு ஒன்றி இருக்கின்ற இறைவனை தரிசித்தால் அவன் பரந்து விரிந்த சடையை அணிந்து இருப்பவனாகவும் பசுமையான பொன்னைப் போன்ற பிரகாசமான நிறத்தை உடையவனாகவும் கண்டவுடன் போற்றி வணங்கப்படும் பெருமைக்கு உரியவனாகவும் வெண்ணிற நிலவை தலையில் சூடி இருக்கின்றவனாகவும் இருக்கின்றான்.

பாடல் #1629: ஆறாம் தந்திரம் - 5. தவம் (துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்)

பின்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதலவ னெம்மிறை
தன்னெய்து காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே.

விளக்கம்:

தவ நிலையை அடைந்த பிறகு அதில் மேன்மை நிலையை அடைய வைத்தது ஒரு பேரின்பத்தைக் கொண்ட பிறவியாகும். இந்த பிறவியை எடுப்பதற்கு முன்பு இருந்தே ஒவ்வொரு பிறவியிலும் இந்த நிலையை அடைவதற்கான வழி முறைகளை வைத்து அருளியது ஆதி முதல்வனாகிய எமது இறைவனாகும். தாம் இறைவனாகவே இருக்கின்றோம் என்பதை எமது ஆன்மா உணருகின்ற காலத்தில் அவன் தானாகவே உள்ளிருந்து வெளிப்பட்டு அருள்வான். அவ்வாறு இறைவன் வெளிப்படும் நிலையை அடைய வைத்தது தவ நிலையில் உறுதியாக இருக்கின்ற மனமாகும்.

கருத்து: தவ நிலையில் மேன்மை அடைந்து இறைவனை உணருகின்ற நிலையானது ஒரே பிறவியில் கிடைத்து விடுவதில்லை. அதற்கு முன்பே ஒவ்வொரு பிறவிகளில் இறைவனின் அருளால் கிடைத்து செய்த பல சாதகங்களின் பலனால் சிறிது சிறிதாக இந்த நிலை கிடைக்கின்றது.

பாடல் #1630: ஆறாம் தந்திரம் - 5. தவம் (துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்)

அமைச்சரு மானைக் குழாமு மரசும்
பகைத்தெழு பூசலுட் பட்டன் னடுவே
யமைத்ததோர் ஞானமு மாக்கமு நோக்கி
யிமைத்தழி யாதிருப் பாரவர் தாமே.

விளக்கம்:

நுண்ணறிவு மிக்க அமைச்சர்களைக் கொண்டு வலிமை மிக்க யானைப் படைகளுடன் உயர்ந்த பேரரசர்களாக இருந்தாலும் ஒரு பகை நாட்டு அரசன் அவர்கள் மேல் கொண்ட விரோதத்தால் எழுகின்ற போருக்கு உள்ளே அகப் பட்டுக் கொண்டு அழிந்து போகின்றார்கள். அப்படி அழிகின்றவர்களுக்கு நடுவில் இறைவன் தமது மாபெரும் கருணையினால் வைத்து அருளிய ஒரு உண்மை ஞானத்தையும் அதனால் கிடைக்கின்ற முக்தி பேறையும் குறிக்கோளாகக் கொண்டு ஒரு கணப் பொழுதும் இறைவனை மறக்காமல் தவ நிலையில் இருந்து எப்போதும் அழிந்து போகாத நிலையில் இருப்பவர்களே தவசிகள் ஆவார்கள்.

பாடல் #1631: ஆறாம் தந்திரம் - 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

சாத்திர மோதுஞ் சதிர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோ
லார்த்த பிறவி அகலவிட் டோடுமே

விளக்கம்:

சாத்திரங்களை படித்து விட்டு அதன் பெருமைகளையே பேசித் திரிகின்றதை விட்டு விடுங்கள் நீங்கள். ஒரு கண நேரமாவது மூச்சுக்காற்றை தடுத்து நிறுத்தி தமக்குள்ளே உற்றுப் பாருங்கள். அப்படி பார்த்த அந்த தவ பார்வையானது பசுமையான மரத்தில் அடித்த ஆணி போல உறுதியாக நினைவில் நின்று போராடுகின்ற கடினமான பிறவிகள் அனைத்தையும் தம்மை விட்டு விலகி ஓடி விடும்.

பாடல் #1632: ஆறாம் தந்திரம் - 5. தவம் [துறவின் முழுமை பெற்ற நிலையே தவம் ஆகும்]

தவம்வேண்டு ஞானந் தலைபட வேண்டிற்
றவம்வேண்டா ஞான சமாதிகை கூடிற்
றவம்வேண்டா மச்சக சன்மார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே.

விளக்கம்:

உண்மை ஞானம் என்பது சித்தியாக வேண்டும் என்றால் அதற்கு தவம் செய்ய வேண்டும். உண்மை ஞானமும் சமாதி நிலையும் கை கூடப் பெற்றவர்களுக்கும் சன் மார்க்கம் சக மார்க்கம் ஆகிய மார்க்கங்களை கடை பிடிப்பவர்களுக்கும் மாற்றமே இல்லாத மேன்மையான சமாதி நிலையை அடைந்து விட்டவர்களுக்கும் எந்த விதமான தவ நிலையும் வேண்டாம்.

பாடல் #1633: ஆறாம் தந்திரம் - 6. தவ தூடணம் [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

ஓதலும் வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றாற்
காதலும் வேண்டா மெய்காய மிடங்கண்டாற்
சாதலும் வேண்டாஞ் சமாதியைக் கூடினாற்
போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே.

விளக்கம்:

தங்களின் உயிருக்கு உயிராக உள்ளுக்குள் இருக்கின்ற இறைவனை உணர்ந்து அடைந்து விட்டால் மந்திரங்களை ஓத வேண்டியது இல்லை. அரியதான பேருண்மையாகிய சிவப் பரம்பொருள் தங்களின் உடலையே கோயிலாக ஏற்றுக் கொண்டு வீற்றிருந்தால் எந்த விதமான தேவைகளும் இல்லை. சமாதி நிலையை கைவரப் பெற்று விட்டால் உடலுக்கு அழிவு என்பதே இருக்காது. ஐந்து புலன்களும் காட்டுகின்ற வழிகளில் போகாமல் அவற்றை தன் இஷ்டத்திற்கு மாற்றி இருப்பவர்களுக்கு இறைவனை தேடி எங்கும் போக வேண்டியது இல்லை.

பாடல் #1634: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்
சத்தமும் வேண்டாஞ் சமாதியைக் கூடினாற்
சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே.

விளக்கம்:

மாயை நீங்கிய உண்மையை அறிந்து மனம் அமைதி அடைந்து விட்டால் மந்திரங்களை அசபையாகவோ உரக்கவோ சொல்லி செபிக்க வேண்டியது இல்லை. சமாதி நிலையை அடைந்து விட்டால் எந்த விதமான எண்ணங்களும் இருக்காது. உள்ளுக்குள் எந்த விதமான அழுக்குகளும் இல்லாமல் நிற்கின்ற நிலையை அடைந்து விட்டால் வெளிப்புற சுத்தங்கள் எதுவும் தேவை இல்லை. சிந்தனை செய்வதற்கு எதுவுமே தேவை இருக்காது செயலே இல்லாமல் இருக்கின்ற நிலையை அடைந்து விட்டதால்.

பாடல் #1635: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார்
விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே.

விளக்கம்:

தவத்தினால் கிடைக்கும் பயன் இது என்பதை அறிந்து உணர்ந்தவர்களே ஆதிகாலத்தில் இருந்து உண்மையான தவத்தை செய்கின்றார்கள். தவத்தினால் கிடைக்கும் பயனை அறிந்து உணர்ந்து கொண்டவர்கள் அந்த பயனை மற்றவர்களும் பெறுவதற்காக தாம் அறிந்து கொண்ட தவத்தை செய்யும் வழிமுறைகளை தகுதியானவர்களும் அறிந்து கொள்ளும் படி காட்டிக் கொடுக்கின்றார்கள். இப்படி மற்றவர்களும் பயன் பெற வழி வகுத்துக் கொடுத்ததினால் உண்மையான தர்மத்தை செய்தவர்கள் ஆகின்றார்கள். ஆகவே இவர்களே விண்ணுலகில் இருக்கும் தேவர்களுக்கும் மண்ணுலகில் இருக்கின்ற உயிர்களுக்கும் உயர்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

பாடல் #1636: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி
வாடித் தவஞ்செய்வ தேதமிவை களைந்
தூடிற் பலவுல கோரெத்தவ மாமே.

விளக்கம்:

மனம் ஒன்று கூடி தவம் செய்து இறைவனின் பேரழகு வாய்ந்த திருவடிகளை தரிசித்தேன். அவரை அடைய வேண்டும் என்று எமக்குள்ளே தேடி தவம் செய்து கண்டு சிவனின் திருவடியே சரணாகதியாக அடைந்தேன். இவ்வாறு மனம் ஒன்று படாமலும் இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலும் உடலை வருத்திக் கொண்டும் வெறும் உலக ஆசைகளுக்காகவும் தவம் செய்வது குற்றமாகும். இவைகளை எல்லாம் நீக்கி விட்டு தவம் செய்யாமல் தமக்குள்ளே ஒன்றுக்கொன்று மாறுபட்ட சிந்தனைகளால் குழப்பிக் கொண்டு பல உலகத்தவர்கள் செய்கின்றதெல்லாம் எந்த தவம் ஆகும்? ஆகாது.

பாடல் #1637: ஆறாம் தந்திரம் – 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

மனத்துறை மாக்கட லேழுங்கை நீங்கித்
தவத்திடை யாளர்தஞ் சர்வத்து வந்தார்
பவத்திடை யாளரவர் பணி கேட்கில்
முகத்திடை நந்தியை முந்தலு மாமே.

விளக்கம்:

மனதில் வீற்றிருக்கின்ற மாபெரும் கடலாகிய மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் ஆகிய ஏழு விதமான மாயைகளாகிய குற்றங்களும் நீங்கி போகும் படி தாம் செய்கின்ற தவத்தில் தகுதி பெற்றவர்கள் தமது தவத்தில் முழுமை பெற்று வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களிடம் வாழ்க்கையின் நடுவில் சிக்கிக் கொண்டு தவம் செய்ய முயற்சி செய்கின்றவர்கள் அவர்கள் செய்த தொண்டு என்ன விதம் என்பதை கேட்டுத் தெளிந்து அதை கடை பிடித்து தாமும் தவம் புரிந்தால் தங்களின் முகத்தின் நடுவில் குருநாதராகிய இறைவனை தரிசிக்கும் நிலையை பெறுவார்கள்.

பாடல் #1638: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

மனத்திடை நின்ற மதிவா ளுருவி
யினத்திடை நீக்கி யிரண்டற வீர்ந்து
புனத்திடை நஞ்சையும் போக மறித்தாற்
றவத்திடை யாறொளி தன்னொளி யாமே.

விளக்கம்:

மனதிற்கு நடுவில் நிற்கின்ற அறிவு வடிவான இறைவனின் ஞானமாகிய வாளினை தமது தவத்தின் வழியாக உருவி எடுத்து தம்மை சூழ்ந்து இருக்கின்ற பந்த பாசங்களாகிய தளைகளையெல்லாம் அறுத்து நீக்கி, தாமும் இறைவனும் வேறு வேறு என்கின்ற இருமைத் தத்துவத்தை அறுத்து, இறைவனோடு ஒன்றாக சேர்ந்து, எவ்வளவு நீர் இருந்தாலும் அதற்கு நடுவில் ஒரு துளி நஞ்சை விட்டாலும் மொத்த நீரும் விஷமாகி விடுவது போல ஆசைகள் இல்லாத மனதில் ஒரு சிறு ஆசையும் இனி சேர்ந்து விடாமல் போகும் படி தடுத்து நிறுத்தினால், தாம் செய்து வருகின்ற தவத்தின் மேன்மை பெற்ற நிலையில் தமக்குள் இருக்கும் ஆறு ஆதாரங்களாகிய ஒளிகளின் மூலம் ஏறிச் சென்று, ஏழாவது சக்கரமாகிய சகஸ்ரதளத்தில் வீற்றிருக்கும் பேரொளியாகிய இறைவனாகவே தமது ஒளியும் ஆகி விடும்.

பாடல் #1639: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

ஒத்து மிகவு நின்றானை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கு முனிவ னெனும்பதஞ்
சத்தான செய்வது தான்றவந் தானே.

விளக்கம்:

தம்முடைய பக்குவத்திற்கு இணையாக கூடவே இருந்தாலும் பேரான்மாவாக மிகுந்து தம்மோடு சேர்ந்தே நிற்கின்றவனாகிய இறைவனின் புகழ்களை தாம் போற்றி உரைப்பது பக்தியை கொடுக்கும். அதனுடன் பணிவும் சேர்ந்து அடியவர்கள் இறைவனை தொழும் போது முனிவன் என்கின்ற பக்குவத்தில் தாம் செய்கின்ற சாதகத்தை இறை சக்தியோடு சிறப்பாக செய்வது முக்தியை கொடுப்பதற்கு காரணமாகிய தவத்தை தானாகவே கொடுக்கும்.

பாடல் #1640: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக் கென்றெண்ணி
மலர்தொட்டுக் கண்டேன் வரும்பலன் காணேன்
றலைகெட்ட நூல்கண்டு தாழ்ந்தேனென் னுள்ளந்
தலைதொட்டுக் கண்டேன் றவங்கண்ட வாறே.

விளக்கம்:

பூச்செடிகளில் உள்ள இலைகளை தொட்டு அதில் மலர்ந்து இருக்கின்ற பூக்களை பறித்து எடுத்து எமது தந்தையாகிய இறைவனுக்கு சாற்ற வேண்டும் என்று எண்ணிக் கொண்டு மலர்களை கோர்த்து மாலையாக்கி சாற்றி அதனால் கிடைக்கின்ற பலனை பார்க்கலாம் என்று எதிர் பார்த்துக் கொண்டு இருந்தேன். எந்த பலனும் கிடைக்காத போது ஏன் என்று ஆராய்ந்து பார்த்தால் உண்மை இல்லாத தவறான கருத்துக்களை சொல்லுகின்ற நூல்களில் உள்ளதை கண்டு அதன் படி செய்து இப்படி தாழ்ந்து விட்டேன் என்று உணர்ந்து கொண்டேன். அப்போது எனது உள்ளத்திற்குள்ளே வீற்றிருக்கின்ற இறைவனின் அருளால் தலை உச்சியில் இருக்கின்ற பேரொளியாகிய இறை சக்தியை தொட்டு அடைந்து தவத்தை காணுக்கின்ற வழி முறை இதுவே என்று கண்டு உணர்ந்து கொண்டேன்.

பாடல் #1641: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை (இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது)

படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ண மீச னருளும்
விடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கி
லுடரடை செய்வ தொருன்மத்த மாமே.

விளக்கம்:

படர்ந்து விரிந்த சடையைக் கொண்டு மாபெரும் தவத்தைக் கொண்டவனாக இருக்கின்ற இறைவனை உறுதியாக பற்றிக் கொண்ட பக்தர்களுக்கு அவர்களது வாழ்வில் எந்த விதமான துன்பங்களும் வந்து சேராத படி இறைவன் அருளுவான். அப்படி இல்லாமல் தாம் செய்ய வேண்டிய கடமைகளைத் துறந்து தவம் செய்கின்றோம் என்று காட்டிற்குள் வீற்றிருந்து முயற்சி செய்கின்றவர்களின் உண்மையான தவத் தன்மை என்னவென்று பார்த்தால் அவர்கள் தவத்திற்கான உடல் அடையாளங்களை மட்டுமே கடை பிடித்துக் கொண்டு செய்வதால் அது தவம் ஆகாது. அது ஒரு விதமான பித்துத் (மனநலம் பாதித்த) தன்மையே ஆகும்.

கருத்து:

தவம் செய்கின்றோம் என்ற பெயரில் காட்டிற்குள் செல்வதும் தாடி வளர்த்துக் கொள்வதும் ஜடாமுடி வைத்துக் கொள்வதும் புலித் தோலில் அமர்வதும் போன்ற உடல் சம்பந்தமான செயல்களை மட்டுமே கவனத்தில் கொண்டு செய்வது தவம் ஆகாது. உள்ளுக்குள்ளே இருக்கின்ற இறைவனை உறுதியாக பற்றிக் கொண்டு பக்தி செய்வதே உண்மையான தவம் ஆகும்.

பாடல் #1642: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போ
யீற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தனொக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே.

விளக்கம்:

இறைவனை அடைய வேண்டும் என்று முறைப் படி தவம் செய்யாமல் இருக்கின்றார்கள் ஏனெனில் அதற்கு என்று அருளப்பட்டிருக்கும் ஆகமங்களை படித்து அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் காட்டிற்கு சென்று தவம் செய்கின்றேன் என்று தினம் தோறும் பசிக்கு உணவு வேண்டி நின்று காட்டை சுற்றி வருவது எப்படி இருக்கின்றது என்றால் ஆற்றில் அசையாமல் கிடக்கும் முதலையை கண்டு பயந்து போய் குட்டிகளை ஈன்ற கரடியின் எதிரில் சென்று அகப்பட்டுக் கொண்டதை ஒத்து இருக்கின்றது.

தத்துவ விளக்கம்:

ஆறு என்கின்ற வாழ்க்கையில் நடப்பவற்றை மிகப் பெரிய துன்பம் என்று நினைத்தும் வரப்போகின்ற எதிர்காலத்தை நினைத்து பயந்தும் குடும்பத்தை விட்டு காட்டிற்கு சென்று தவம் செய்கின்றேன் என்று காட்டிற்கு சென்றாலும் வீட்டில் விட்டு வந்த உற்றார் உறவினர்களையும் சொத்துக்களையும் நினைத்துக் கொண்டே பசிக்கு உணவு தேடி அலைவது சிறிய துன்பத்திற்கு பயந்து மிகப் பெரிய துன்பத்தில் சிக்கிக் கொண்டது போல் ஆகும்.

பாடல் #1643: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்
குழக்கன்று துள்ளியக் கோணியைப் புக்காற்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
விழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே.

விளக்கம்:

தவத்தில் மேன்மை நிலையை அடைகின்ற வழி முறையும் அந்த தவத்தின் பலன்களை அனுபவிக்கின்ற வழி முறையும் இளங் கன்று போல ஆசைகளின் வழியே துள்ளி குதிக்கின்ற மனதை உடலாகிய கோணிப் பைக்குள் உள்ளே புகுந்து இருக்கும் படி வைத்து ஆசைகள் இல்லாமல் இறைவனை மட்டுமே நினைக்கும் படி கட்டி வைக்க முடிந்தவர்களுக்கு, தமக்கு உள்ளே அடங்கி இருக்கின்ற மனது மறுபடியும் ஆசைகள் பற்றுக்களின் வழியே இழுத்துக் கொண்டு போகாமல், தமது நெஞ்சத்திற்குள் இறைவன் இருக்கின்ற இடத்திலேயே அவனோடு சேர்ந்து இருக்கும்.

யோக விளக்கம்:

யோக வழி முறையில் யோகியானவர் தமது குண்டலினி சக்தியை துள்ளிக் குதிக்கின்ற மூச்சுக் காற்றாகிய கன்றின் மூலம் எழுப்பி ஆறு ஆதார சக்கரங்களாகிய பழங்களை பழுக்கும் படி செய்து குண்டலினி சக்தியை ஏழாவது சக்கரமாகிய சகஸ்ரதளம் எனும் கோணிப் பைக்குள் எடுத்துச் சென்று கட்டி வைத்து அதன் பலனால் ஊறுகின்ற அமிழ்தத்தை உண்டு அங்கே வீற்றிருக்கும் இறை சக்தியோடு ஒன்றாக சேர்ந்து விடும் படி செய்து இறைவனை அடையலாம்.

பாடல் #1644: ஆறாம் தந்திரம் - 6. தவ நிந்தை [இறைவன் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வெளியில் தேடுவது பயனற்றது என்பதை கூறுவது]

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவாற்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோ ரறவுண்டாற்
சித்தஞ் சிவமாகவே சித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே.

விளக்கம்:

அறிவு சிவமாகவே ஆகுவதற்கு உடலால் செய்கின்ற தவ வழி முறைகள் எதுவும் வேண்டாம் ஆதலால் அறிவினால் இறைவனை எண்ணிக்கொண்டு இருந்தாலே போதும். இது போல இறைவனை எண்ணிக் கொண்டு இருப்பதனால் அறிவு சிவமாகி பேரின்பத்தை அடைந்தவர்கள் அனைத்தையும் விட்டு விலகி இருப்பதனாலேயே அடைந்தார்கள். அதன் விளைவாக அறிவு சிவமாகவே ஆகி விடும் போது அதனால் கிடைக்கின்ற இறை அருளே முக்தியாகவும் இருக்கின்றது. இவ்வாறு அறிவு சிவமாகவே ஆகுவது இறைவனை பற்றி மட்டுமே எண்ணிக் கொண்டே இருக்கின்ற தவத்தின் பலனால் ஆகும்.



பாடல் #1645: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

பிரானரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம்
பிரானரு ளுண்டெனி லுண்டுநல் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையு முண்டு
பிரானரு ளாற்பெருந் தெய்வமு மாமே.

விளக்கம்:

அனைத்திற்கும் தலைவனாகிய இறைவனின் திருவருள் ஒருவருக்கு இருக்கின்றது என்றால் அவருக்கு தருமத்தினால் வருகின்ற அனைத்து விதமான செல்வங்களும், உண்மை அறிவாகிய பேரறிவு ஞானமும் கிடைக்கும். இறைவனின் திருவருளில் ஞானம் கிடைக்கப் பெற்ற அவருக்கு இந்த பிறவியிலேயே மாபெரும் இறை தன்மையை கிடைக்கப் பெற்று அதன் பிறகு பிறவி இல்லாத நிலையில் மாபெரும் இறைவனாகவே அவரும் ஆகிவிடுவார்.

பாடல் #1646: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

தமிழ்மண் டலமைந்துந் தவ்விய ஞான
முழவது போல வுலகர் திரிவ
ரவிழு மனமு மெமாதி யறிவுந்
தமிழ்மண் டலமைந்துந் தத்துவ மாமே.

விளக்கம்:

ஆதி மொழியாகிய தமிழிலிருந்து உருவாகி இருக்கின்ற அனைத்து விதமான மொழிகளின் மூலமும் உலகத்தில் ஐந்து விதமான பூதங்களால் ஆகிய அனைத்து பொருள்களின் மூலமும் அறிந்து கொள்ள வேண்டிய ஞானத்தை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று நிலத்தை உழுது பண்படுத்தி பயிர் வளர்ப்பது போலவே உலகத்தில் உள்ளவர்கள் அலைந்து திரிந்து முயற்சி செய்கிறார்கள். ஆனால் உலகத்தில் உள்ள ஆசைகளும் பற்றுக்களும் வேண்டாம் என்று அனைத்தையும் விட்டு விலகி இருக்கின்ற மனமானது எமது ஆதி முதல்வனாகிய இறைவனின் அறிவு வடிவத்தை பெற்று அவனது திருவருளால் அனைத்து மொழிகளினாலும் உலகத்தில் உள்ள அனைத்து பொருள்களினாலும் அறியக் கூடிய அனைத்து விதமான ஞானத்தையும் ஒருவருக்கு கொடுத்து விடும்.

கருத்து: அனைத்தையும் கற்றுத் தெரிந்து கொண்டாலும் அடைய முடியாத பேரறிவாகிய உண்மை ஞானத்தை ஆசைகளையும் பற்றுக்களையும் விட்டு விலகி இருக்கின்ற மனதினால் அவனது திருவருளைப் பெறுவதின் மூலம் பெற்று விடலாம்.



பாடல் #1647: ஆறாம் தந்திரம் – 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

புண்ணிய பாவ மிரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சில ஞானிக
ளெண்ணி யிரண்டையும் வேரறுத் தப்புறத்
தண்ணலி ருந்திட மாய்ந்து கொள்ளீரே.

விளக்கம்:

புண்ணியம் பாவம் என்று இரண்டு விதமான வினைகளும் அவற்றின் பயன்களுமே இருக்கின்றன இந்த உலகத்தில். இறைவனின் திருவருள் கிடைக்கும் பொழுது அவற்றை அறிந்து கொள்வார்கள் சில ஞானிகள். அவ்வாறு அறிந்த பிறகு அவற்றை நினைத்து பார்த்து புண்ணியம் பாவம் ஆகிய இரண்டு வினைகளையுமே வேரோடு அறுத்து எடுத்து தம்மை விட்டு அப்புறப் படுத்தி விட்டால், அனைத்திற்கும் தலைவனாகிய இறைவன் இருக்கின்ற இடம் தமக்குள்ளேயே இருப்பதை ஆராய்ந்து அறிந்து கொள்வார்கள்.

பாடல் #1648: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

முன்னின் றருளு முடிக்கின்ற காலத்து
நண்ணின் றுலகில் நடுவுயிராய் நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடு
முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே.

விளக்கம்:

ஆதியிலிருந்தே நின்று அருளுகின்ற இறைவன் ஒருவருக்கு வினை முடிகின்ற காலத்தில் நன்மையாக நின்று அருளுகின்றான். உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கு உள்ளே உயிருக்கு உயிராக நிற்கின்றவனாகிய அவனே தமது அருளை வழங்கிய பின்பும் அடியவருடனே நின்று அவர் எப்போதும் அருள் நிலையிலிருந்து விலகி விடாமல் பாதுகாத்து அருளுகின்றான். அந்த அருளினால் இனி வரக்கூடிய பிறவிகளையும் நீக்கி விடுகின்றான். அத்தகைய இறைவன் எமக்கு உள்ளே நின்று எமக்கு ஒரு பேரின்பமான முக்தியை தந்து அருளினானே.

பாடல் #1649: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

சிவனரு ளாற்சில தேவரு மாவர்
சிவனரு ளாற்சில தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேர்கி லாரமைச்
சிவனருள் கூறிற் சிவலோக மாமே.

விளக்கம்:

இறைவனது திருவருளை சரியாக பயன்படுத்தி மேன்மையடைந்த சிலர் வானுலகத்து தேவர்களாகவும் ஆவார்கள். இறைவனது திருவருளை சரியாக பயன்படுத்தி மேன்மையடைந்த சிலர் தெய்வங்களுக்கு சரிசமமாக விளங்குவார்கள். இறைவனது திருவருளினால் இனி எந்த விதமான வினையும் வந்து சேர்ந்து விடாத தன்மை அடைந்தவர்கள் தாம் பெற்ற இறைவனது திருவருளை எடுத்துக் கூறினால் அதுவே சிவ லோகமாகவும் இருக்கின்றது.

பாடல் #1650: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

புண்ணிய னெந்தை புனித னிணையடி
நண்ணி விளக்கென்ன ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவது
மண்ண லிறைவனருள் பெற்ற போதே.

விளக்கம்:

புண்ணியமே வடிவாகிய எமது தந்தையும் புனிதனுமாகிய இறைவனின் இணையில்லாத திருவடிகளை தேடி அடைந்து உண்மை ஞானத்தை எமக்கு விளக்குங்கள் தந்தையே என்று கேட்டுக் கொள்ள அவரது திருவருளால் ஞானம் எமக்குள் விளைந்தது. அப்படி அனைத்திற்கும் தலைவனாகிய இறைவனின் திருவருளால் ஞானம் விளைந்த போதே தெய்வங்களுக்கு சரிசமமாக உலகத்திலேயே இருக்கின்ற அமரர்கள் ஆவதும் வானுலகத்திற்கு சென்று தேவர்கள் ஆவதும் முடியும்.

பாடல் #1651: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தே ரேறி மயங்கு மவையுணர்
நேயத்தே ரேறி நிமலனருள் பெற்றா
லாயத்தே ரேறி யவனிவ னாமே.

விளக்கம்:

உயிர்கள் நிலையில்லாத தமது உடலை இறப்பு இல்லாத நிலை பெற்றதாகிய உயர்ந்த தேராக மாற்றி அதில் ஏறி செல்வதற்கு மனமாகிய பாகனின் கையில் ஐம் புலன்களும் அவன் வசப்படும் படி செய்தால் மாயையின் மயக்கத்திலிருந்து நீங்கி உண்மை அறிவாகிய தேரில் ஏறி மாயையினால் மயங்குகின்ற மனதை மாற்றி உண்மையை உணர வைக்கலாம். அதன் பிறகு அன்பு என்கின்ற நிலையிலிருந்து பேரன்பாகவே மாறுகின்ற தேரில் ஏறினால் ஒரு குற்றமும் இல்லாத இறைவனின் திருவருளை பெற்று விடலாம். அப்போது பொன்னாகவே மாறிவிட்ட பிரகாசமாகிய தேரில் ஏறினால் இறைவனே தாம் எனும் நிலையை அடையலாம்.

பாடல் #1652: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

அவ்வுல கத்தே பிறக்கி லுடலோடு
மவ்வுல கத்தே யருந்தவம் நாடுவ
ரவ்வுல கத்தே யரனடி கூடுவ
ரவ்வுல கத்தே யருள்பெறு வாரே.

விளக்கம்:

இறைவனை அடைய வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு எந்த உலகத்தில் பிறவி எடுத்தாலும் அந்த உலகத்துக்கு ஏற்ற உடம்போடு பிறந்து, அவர்கள் இருக்கின்ற உலகத்திலேயே செய்வதற்கு மிகவும் அரியதான தவங்களை தேடி அடைந்து செய்கின்ற தவசிகள் அவர்கள் இருக்கின்ற உலகத்திலேயே இறைவனின் திருவடியை சேர்ந்து இருப்பார்கள். அவர்கள் இருக்கின்ற உலகத்திலேயே இறைவனது திருவருளையும் பெற்று விடுவார்கள்.

பாடல் #1653: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

கதிர்கொண்ட காந்தங் கனலின் வடிவா
மதிகண்ட காந்த மணிநீர் வடிவாஞ்
சதிகொண்டு தாக்கி யெரியின் வடிவா
மெரிகொண்ட வீசனெ ழில்வடி வாமே.

விளக்கம்:

இறையருள் பெற்று பொன் போன்ற பிரகாசமான உடலைக் கொண்டு தங்களை நோக்கி மற்றவர்களையும் ஈர்க்கின்ற ஞானிகள் வெப்பத்தின் வடிவமாக இருக்கின்றார்கள். இறையருளால் உண்மை ஞானத்தை கண்டு கொண்டு தங்களை நோக்கி மற்றவர்களையும் ஈர்க்கின்ற ஞானிகள் இரசமணியின் நீரால் இரும்பையும் தங்கமாக்குவது போல தங்களை நாடி வந்த மற்றவர்களுக்கும் ஞானத்தை தருகின்ற ஞான வடிவமாக இருக்கின்றார்கள். தம்மை சரணடைந்த அடியவர்களின் வினைகளை எப்படி அழிக்க வேண்டும் என்கின்ற சூழ்ச்சியை கொண்டு அவற்றை தாக்கி எரித்து அவற்றை நெருப்பின் வடிவமாக ஆக்கி விடுவதே தமது இடது திருக்கரத்தில் நெருப்புச் சட்டியைக் கொண்டு இருக்கின்ற இறைவனின் பேரழகு வடிவத்தின் தத்துவம் ஆகும்.

கருத்து:

இறைவன் தமது திருக்கரத்தில் நெருப்புச் சட்டியை வைத்திருப்பதன் தத்துவம் தம்மை சரணடைந்த அடியவர்களின் வினைகளை அழித்து நெருப்பாக்குவதே ஆகும். அது போலவே இறையருளால் ஞானத்தை பெற்ற ஞானியர்களும் இரும்பை ஈர்த்து இழுக்கின்ற காந்தத்தைப் போல தங்களை நோக்கி மற்றவர்களையும் ஈர்த்துக் கொண்டு இரும்பு போல இருக்கின்ற அவர்களின் அறிவையும் தங்கம் போல மாற்றுகின்ற இரசமணி நீராக இருக்கின்றார்கள்.

பாடல் #1654: ஆறாம் தந்திரம் - 7. அருளுடைமையின் ஞானம் வருதல் [இறை அருளின் மூலம் ஞானம் பெறுதல்]

நாடு முறவுங் கலந்தெங்க ணந்தியைத்
தேடுவன் றேடிச் சிவபெருமா னென்று
கூடுவன் கூடிக் குரைகழற்கே செல்ல
வீடு மளவும் விடுகின்றி லேனே.

விளக்கம்:

எண்ணத்தில் அன்பை கலந்து எங்களின் குருநாதனாகிய இறைவனை தேடிக் கொண்டே இருப்பேன். தேடி அடையும் போது அவனே அனைத்திற்கும் மேலான சிவப் பரம் பொருள் என்று அறிந்து அவனோடு சேர்ந்து கொள்வேன். அப்போது அவனது திருவருளும் என்னோடு சேர்ந்து கொள்ள அவனுடைய பேரழகு வாய்ந்த திருவடிக்கே சென்று விட வேண்டும் என்று உறுதியாகப் பற்றிக் கொண்டு அவனோடு இரண்டறக் கலக்கின்ற காலம் வரும் வரையில் அவனுடைய திருவடிகளை விட்டு விட மாட்டேன்.

பாடல் #1655: ஆறாம் தந்திரம் - 8. அவ வேடம் (தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது)

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங் கள்கொண்டு வெருட்டிடும் பேதைகா
ளாடியும் பாடியும் மழுது மரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் றாள்களே.

விளக்கம்:

ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு மிகவும் இனிப்பான உணவுகளை உண்ணுகின்றவன் அதற்கு தேவையான செல்வம் திரட்டுவதற்கு தவசிகள் போல வேடம் அணிந்து கொண்டு மற்றவர்களை பயமுறுத்தியும் பொய்யான வார்த்தைகளால் மயக்கியும் திரிகின்ற முட்டாள் மனிதர்களாக இருக்கின்றார்கள். இப்படி வாழ்க்கையை வீணாக்காமல் இறைவன் மேல் உண்மையான அன்பு கொண்டு ஆடியும் அவனது திருப் புகழ்களை பாடியும், அழுதும் அவன் காண கிடைக்க மாட்டானா என்று புலம்பியும் அவன் எங்கு இருக்கின்றான் என்று தேடினால் இறைவனது திருவடிகளை காண்பீர்கள்.

பாடல் #1656: ஆறாம் தந்திரம் - 8. அவ வேடம் [தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது]

ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
யீனம தேசெய் திரந்துண் டிருப்பினு
மான நலங்கெடு மப்புவி யாதலா
லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே.

விளக்கம்:

உண்மையான ஞானம் இல்லாதவர்கள் தவசிகள் போல வேடம் அணிந்து கொண்டு, அவர்கள் இருக்கின்ற நாட்டிற்கு நடுவிலேயே திரிந்து கொண்டு, இழிவான செயல்களே செய்து கொண்டு, மற்றவர்களிடம் பிச்சை எடுத்து உணவு சாப்பிட்டு கொண்டு இருந்தாலும், அவர்களின் செயலால் நாட்டிற்கு அவமானமும், நன்மை கெடுதலும், அவர்கள் இருக்கின்ற நாடு இந்த பூமியில் இருப்பதால் உலகம் அனைத்திற்குமே கெடுதலும் நடக்கும். ஆகவே இழிவான அவர்களின் வேடத்தை நீக்கி அவர்களை உண்மையை உணர செய்து அதன் பயனால் உலகம் இன்பம் அடையும் படி செய்வது உண்மை ஞானிகளின் கடமையாகும்.

பாடல் #1657: ஆறாம் தந்திரம் – 8. அவ வேடம் [தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது]

இன்பமுந் துன்பமு நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்கா
மென்ப விறைநாடி நாடோறு நாட்டினில்
மன்பதை செப்பஞ் செயில்வையம் வாழுமே.

விளக்கம்:

ஒரு நாட்டில் உள்ளவர்கள் அவர்கள் இருக்கின்ற இடத்தில் செய்கின்ற நன்மையான செயல்களாலும் தீமையான செயல்களாலும் தான் அவர்கள் இருக்கின்ற நாட்டிற்கு இன்பம் வருவதும் துன்பம் வருவதும் நிகழ்கின்றது. ஆதலால் அதை தவிர்த்து இறைவனை தேடி தினம் தோறும் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தங்களின் மனதை கெடுக்கின்ற விஷயங்களை நீக்கி செம்மையாக்குவதை செய்தால் உலகம் இன்பமோடு வாழும்.

கருத்து: செம்மையான மனதோடு எதை செய்தாலும் அது தர்மமாகும் இதுவே உலகத்திற்கு நன்மையை கொடுக்கும். அவ்வாறு இல்லாமல் தீமையான மனதோடு செய்கின்ற செயல்களே அவ வேடமாகும் இதுவே நாட்டிற்கு துன்பத்தை கொடுக்கும்.



பாடல் #1658: ஆறாம் தந்திரம் - 8. அவ வேடம் (தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது)

இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானார்
கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே.

விளக்கம்:

ஞான குருவின் வழியை பின்பற்றி வருகின்ற சீடர்கள் கூட்டத்தோடு சேர்ந்தவர்கள் உண்மையான வேடம் அணிவது தேவர்கள் ஆகுவதற்காக ஆகும். ஆனால் இழிவான கூட்டத்தோடு சேர்ந்தவர்கள் பொய்யாக வேடம் அணிவது அனைவருக்கும் மேலானவன் என்ற பொய்யான பதவியை பெறுவதற்கு ஆகும். ஆகவே பொய்யான வேடத்தால் பழியை பெற்ற கூட்டத்தவர் ஆகிய இவர்கள் அடுத்தவர்களின் வாழ்க்கையை பாழாக்கிய கொடுமையான மனிதர்கள் ஆக இருக்கின்றார்கள். எனவே தங்களின் வாழ்க்கையை வீணாக கழித்த கூட்டத்தவர்கள் உண்மை வேடம் அணிந்த நல்லவர்கள் கூட்டத்திலிருந்து நீக்கி களையப் பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

பாடல் #1659: ஆறாம் தந்திரம் - 8. அவ வேடம் [தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது]

பொய்த்தவஞ் செய்வார் புகுவார் நரகத்துப்
பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகாரேற்
பொய்த்தவ மெய்த்தவம் போகத்துட்போக்கியஞ்
சத்திய ஞானத்தாற் றாங்குந் தவங்களே.

விளக்கம்:

உண்மையான தவசிகளைப் போல நடிக்கின்ற பொய்யான தவத்தை செய்பவர்கள் இறந்த பிறகு நரகத்திற்கே சென்று அடைவார்கள். பொய்யான தவத்தை செய்தவர்கள் பாவத்தை மட்டுமே சேர்த்துக் கொள்வதால் புண்ணியம் பெற்றவர் ஆக மாட்டார்கள். ஆனால், பொய்யான தவமாக இருந்தாலும் உண்மையான தவமாக இருந்தாலும் உலகத்தில் வினைகளை கொடுக்கின்ற ஆசைகளை தமக்குள்ளிருந்து நீக்கி விட்டு அதன் பயனால் கிடைக்கின்ற உண்மையான ஞானத்தால் உறுதியாக தாங்கப்பட்டு இருப்பதே உண்மையான தவங்கள் ஆகும்.

பாடல் #1660: ஆறாம் தந்திரம் - 8. அவ வேடம் (தவசிகள் போல பொய்யாக வேடம் அணிவது)

பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேட மெய்வேடம் போதவே பூணினு
முய்வேட மாகுமு ணர்ந்தறிந் தோர்க்கே.

விளக்கம்:

உண்மையான தவசிகளைப் போல பொய்யாக வேடம் அணிந்து கொள்பவர்கள் சும்மா இருந்து மற்றவர்கள் தானமாக தருகின்ற உணவை வைத்து தமது பசியை தீர்த்துக் கொள்கின்ற பயனை எண்ணியே அப்படி வேடம் போடுகின்றார்கள். உண்மையான வேடத்தை அணிந்த தவசிகள் உயிர் வாழ்வதற்காக மட்டுமே உணவு யாசிக்கின்ற பிச்சை என்கின்ற மேன்மையான கொள்கையை மேற் கொண்டவர்கள் ஆவார்கள். பொய்யான வேடமாக இருந்தாலும் உண்மையான வேடமாக இருந்தாலும் அவர்களின் ஆசைகளோ கொள்கைகளுக்கோ ஏற்றபடி அணிந்து கொண்டாலும், இறைவனை அடைவதற்கு அந்த வேடம் பயன்படுவது அந்த வேடத்தின் உள்ளே இருக்கின்ற உண்மையான தத்துவத்தை உணர்ந்து அறிந்து கொண்டவர்களுக்கு மட்டுமே ஆகும்.

கருத்து:

பொய்யான வேடம் அணிந்தாலும் உண்மையான வேடம் அணிந்தாலும் தவ வேடத்தின் உட்பொருளாகிய எதை செய்தாலும் ஆசைகள் இல்லாமல் யாசித்து செய்கின்ற தத்துவத்தை உணர்ந்து அறிந்து கொண்டவர்களுக்கே அது இறைவனை அடைவதற்கு வழிகாட்டும்.

பாடல் #1661: ஆறாம் தந்திரம் - 9. தவ வேடம் (அகத் தவத்தின் தன்மையை புற வேடத்தில் காட்டுவது)

தவமிக் கவரே தலையான வேட
ரவமிக் கவரே யதிகொலை வேட
ரவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே.

விளக்கம்:

உண்மையான தவ வலிமையை அதிகமாக கொண்ட தவசிகளே அனைத்திலும் சிறந்த உண்மையான தவ வேடத்தை அணிந்தவர்கள் ஆவார்கள். பொய்யான தவ வேடம் அணிந்ததால் பெற்ற பாவங்கள் அதிகமாக கொண்ட பொய்யான தவசிகளே உயிர் கொலையை விடவும் கொடுமையான கொலையாகிய தர்மத்தையே கொலை செய்கின்ற பொய்யான வேடதாரிகள் ஆவார்கள். ஆதலால் பாவங்கள் அதிகமாக கொண்ட அவர்கள் உண்மையான தவ வேடத்திற்கு தகுதி உடையவர்கள் ஆக மாட்டார்கள். உண்மையான அந்த தவ வேடத்தை தவ வலிமை அதிகமாக கொண்ட தவசிகளைத் தவிர வேறு யாராலும் தாங்க முடியாது.

கருத்து:

உண்மையான தவசிகள் அணிந்து இருக்கின்ற வேடப் பொருள்களில் அவர்கள் மேற்கொண்ட தவத்தின் சக்தியானது அதிகமாக இருக்கும். அந்த சக்தியை தாங்குகின்ற தவ வலிமை அவர்களிடம் உண்டு. ஆனால், பொய்யான வேடதாரிகளிடம் தவ வலிமை இல்லாததால் அந்த பொருள்களில் உள்ள சக்தியை தாங்க முடியாது.

பாடல் #1662: ஆறாம் தந்திரம் - 9. தவ வேடம் (அகத் தவத்தின் தன்மையை புற வேடத்தில் காட்டுவது)

பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாம்பிரங் குண்டலங் கண்டிகை
யோதி யவர்க்கு முருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.

விளக்கம்:

உண்மையான தவசிகள் விபூதியை அணிந்து கொள்வது மிகவும் உன்னதமான கருவியாக அனைத்திற்கும் முதலானது ஆகும். அது மட்டுமின்றி காதுகளில் அணிகின்ற செப்பினால் செய்த குண்டலங்களும் கழுத்தில் அணிந்திருக்கும் மணியும் அவர்களுக்கு கருவியாகும். மந்திரங்களை ஓதுகின்ற தவசிகளுக்கு உறுவேற்றுகின்ற கையில் இருக்கின்ற உருத்திராட்ச மாலையும் கருவியாக உள்ளது. இந்தக் கருவிகளை பயன்படுத்துகின்ற முறையை முழுவதும் அறிந்து தெளிந்த தீமை இல்லாத உண்மையான சிவ யோகத்தை புரிகின்ற யோகிகளுக்கு மட்டுமே அவை பயனுள்ளதாகும்.

கருத்து:

சிவ யோகிகள் அணிந்து இருக்கின்ற விபூதி, குண்டலம், உருத்திராட்சம் போன்ற பொருள்களை தீமைகளை நீக்கி நன்மையை கொடுப்பதற்கு கருவியாக பயன்படுத்திக் கொள்ளுகின்ற முறை உண்மையான சிவ யோகிகளுக்கே தெரியும்.

பாடல் #1663: ஆறாம் தந்திரம் - 9. தவ வேடம் (அகத் தவத்தின் தன்மையை புற வேடத்தில் காட்டுவது)

யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையொன்று
வாகத்து நீறணி யாங்கக் கப்பாளஞ்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே.

விளக்கம்:

சிவ யோகிகள் அணிகின்ற பொருள்களான தங்களின் இடுப்புக்கு கீழே கட்டுகின்ற கோவணமும், உடலைப் போர்த்தி இருக்கின்ற காவி ஆடையும், மயிலின் தோகையால் திரித்த கயிறு போல சுற்றி இருக்கின்ற திரிந்த சடை முடி ஒன்றும், உடம்பு முழுவதும் திருநீறு அணிந்தும், மார்பில் அணிந்து இருக்கின்ற மாலையாகிய உருத்திராட்ச மணியும், அழகிய கைப் பிடியைக் கொண்ட கமண்டலமும், உறுதியான தண்டமும் அவர்களின் தவ அடையாளங்கள் ஆகும்.

பாடல் #1664: ஆறாம் தந்திரம் - 9. தவ வேடம் [அகத் தவத்தின் தன்மையை புற வேடத்தில் காட்டுவது]

காதணி குண்டலங் கண்டிகை நாகமு
மூதின சங்கு முயர்கட்டிக் கப்பரை
யேதமில் பாதுகம் யோகாந்த மாதன
மேதமில் யோகவட்டந் தண்டமீ ரைந்தே.

விளக்கம்:

1.காதுகளில் அணிந்து இருக்கின்ற குண்டலங்கள் 2. கழுத்தில் அணிந்து இருக்கின்ற நாக மணி மாலை 3. இயற்கையாகவே முதுமை பெற்று இறந்து கிடைத்த சங்கு 4. உயர்வான திருநீறு வைத்திருக்கும் பாத்திரம் 5. பிச்சை எடுக்கின்ற பாத்திரம் [திருவோடு] 6. குற்றம் இல்லாத பாதணிகள் 7. யோக முத்திரை 8. அமர்ந்து இருக்கின்ற ஆசனம் 9. குற்றம் இல்லாத யோக காப்பு [இரட்சை] 10. தண்டம் ஆகிய பத்து அடையாளங்களும் உண்மையான தவசிகளுக்கான வேடமாகும்.

பாடல் #1665: ஆறாம் தந்திரம் - 9. தவ வேடம் [அகத் தவத்தின் தன்மையை புற வேடத்தில் காட்டுவது]

நூலுஞ் சிகையு முணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
பாலொன்று மந்தணர் பாப்பார் பரமுயி
ரோரொன் றிரண்டெனி லோங்கார மோதிலே.

விளக்கம்:

பூணூலுக்கும் குடுமிக்கும் உள்ள உட் பொருளை உணராதவர்கள் முழு மூடர்களாக இருக்கின்றார்கள். பூணூல் என்பது வேதத்தை முழுதும் அறிந்து உணர்ந்ததை குறிப்பதாகும். தலை உச்சியில் இருக்கும் குடுமி என்பது உண்மை ஞானத்தை உணர்ந்ததை குறிப்பதாகும். வேதப் பொருளாகிய இறைவனை உணர்ந்து அவனோடு ஒன்றி இருக்கின்ற அந்தணர்களே பரம்பொருளாகிய இறைவனே தமது உயிராகவும் இருப்பதை தமக்குள் பார்க்கின்றார்கள். ஒன்று பட்டு இருக்கின்ற இறைவன் ஆன்மா ஆகிய இரண்டும் ஒரே பொருளே என்பதை ஓங்காரத்தை ஓதியே அவர்கள் உணர்ந்தார்கள்.

குறிப்பு:

சுவடிகளில் இந்தப் பாடல் "தவ வேடம்" தலைப்பிலேயே உள்ளது. ஆனால் சில புத்தகங்களில் அடுத்து வருகின்ற "திரு நீறு" தலைப்பில் சேர்க்கப் பட்டுள்ளது. இந்தப் பாடலின் பொருள் தவ வேடத்திற்கே பொருத்தமாக இருக்கின்றது.

பாடல் #1666: ஆறாம் தந்திரம் - 10. திருநீறு (உள்ளுக்குள் உணர்ந்ததை வெளிப்படுத்தும் தவ வேடம்)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி
சிங்கார மான திருவடி சேர்வரே.

விளக்கம்:

உயிர்களின் எலும்பை மாலையாக அணிந்து இருக்கின்ற இறைவன் தனது உடலில் பூசுகின்ற சாம்பல் கவசமாகிய திரு நீற்றை கொஞ்சமும் மங்காமல் பிரகாசமாகத் தெரியும் படி பூசிக் கொண்டு மகிழ்ச்சியை அடைபவர்களாக தாங்கள் இருந்தால் அனைத்து வினைகளும் அவர்களிடம் தங்காமல் விலகி ஓடி விடும். சிவப் பரம்பொருளை அடைகின்ற வழி முறை அவர்களுடன் சேர்ந்தே இருக்கும். அதன் வழியே சென்று பேரழகாக இருக்கின்ற இறைவனின் திருவடியை அவர்கள் அடைவார்கள்.

பாடல் #1667: ஆறாம் தந்திரம் - 10. திருநீறு [உள்ளுக்குள் உணர்ந்ததை வெளிப்படுத்தும் தவ வேடம்]

அரசுட னாலத்தி யாகுமக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவிய நின்மலந் தான்பெற்ற நீத
ருருவம் பிரம னுயர்குல மாமே.

விளக்கம்:

அரச மரத்துடன் ஆல மரம் மற்றும் அத்தி மரம் ஆகிய மூன்று மரங்களின் சுள்ளிகளை ஒன்றாக கலந்து யாகத்தின் நெருப்பில் எரிந்து சிறப்பான உருவமாக மாறி வருகின்ற சாம்பலாகிய திரு நீற்றை உடல் முழுவதும் பூசிக் கொண்டு தவமிருந்து எந்தவிதமான குற்றங்களும் இல்லாத நிலையை அடையப் பெற்ற தர்மத்தின் வடிவமாக இருக்கின்ற தவசிகளின் உருவமானது மனித நிலையை விட மேன்மை பெற்ற தேவர்களின் உயர்ந்த பிறப்பாகவே ஆகி விடுகின்றது.

பாடல் #1668: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் [உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்]

ஞானமில் லார்வேடம் பூண்டு நரகத்தர்
ஞானமுள் ளார்வேட மின்றெனில் நன்முத்தர்
ஞானமு ளவாக வேண்டுவோர் நக்கன்பால்
ஞானமுள வேட நண்ணிநிற் பாரே.

விளக்கம்:

உண்மை ஞானம் இல்லாதவர்கள் பொய்யாக வேடம் அணிந்தால் நரகத்திற்கே செல்வார்கள். உண்மை ஞானத்தை உடையவர்கள் வேடம் அணிந்து இல்லாமல் இருந்தாலும் நன்மையான முக்தியை பெறுவார்கள். உண்மை ஞானம் தமக்குள் உருவாக வேண்டும் என்று விரும்புபவர்கள் மகா நிர்வாண நிலையில் இருக்கின்ற இறைவனின் அருகாமையை விரும்பி உண்மை ஞானத்தை பெறுவதற்கு உள்ள வேடத்தை தங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று வேண்டி நிற்பார்கள்.

பாடல் #1669: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் (உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்)

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர்வேடம் பூணாரருள் நண்ணித்
துன்ஞானத் தோர்சமையத் துரியத் துளோர்
பின்ஞானத் துளோரென்று பேசகி லாரே.

விளக்கம்:

இழிவான ஞானத்தை கொண்டவர்கள் உண்மை ஞானம் கொண்டவர்கள் போல பொய்யாக வேடம் அணிந்தாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பயனும் இல்லை. நன்மையான ஞானத்தை பெற்றவர்கள் வேடம் அணிந்து கொள்வதை விரும்பாமல் இறைவனின் திருவருள் கிடைப்பதையே விரும்பி இருப்பார்கள். தீமையான ஞானத்தை கொண்டவர்கள் தத்தமது சமயங்களின் கொள்கைகளின் மேல் நீங்காத பற்று உள்ளவர்கள் தங்களின் சமயமே பெரியது என்று பேசி தவறான வழியில் செல்வார்கள். அதனால் பிறகு உண்மை ஞானத்தை தாம் கொண்டவர்கள் என்று அவர்களால் பேச முடியாது.

பாடல் #1670: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் [உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்]

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கு
மவமான சாதன மாகாத தாகி
லவமா மவர்க்கது சாதன நான்கு
முவமான மில்பொரு ளுள்ளுற லாமே.

விளக்கம்:

உண்மையான சிவ ஞானிகளுக்கும் சிவ யோகிகளுக்கும் இறைவனை அடைவதற்கான வழி முறைகளான சன் மார்க்கம் சக மார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாச மார்க்கம் ஆகிய நான்கும் பயனில்லாதது ஆகும். ஏனென்றால் தமக்கு சரிசமமாக எதுவும் இல்லாத பரம் பொருளாகிய இறைவனை அவர்கள் தமக்குள் உணர்ந்து தெளிந்து விட்டதால்.

பாடல் #1671: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் (உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்)

கத்தித் திரிவர் கழுவடி நாய்போலக்
கொத்தித் திரிவர் குரக்கறி ஞானிக
ளொத்துப் பொறியு முடலு மிருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானியார் களே.

விளக்கம்:

தாம் அறிந்த கொண்டவற்றை ஞானம் என்று எண்ணி மற்றவர்களுக்கு அதையே எடுத்து சொல்லி திரிகின்ற பொய்யான ஞானிகள் கழுமரத்தில் ஏற்றி இருக்கும் உடலுக்கு அடியில் எப்போது அந்த உடலின் இறைச்சி கிடைக்கும் என்று குரைத்துக் கொண்டு அலைகின்ற நாயை போலவே ஏமாளிகள் எப்போது கிடைப்பார்கள் என்று இருக்கின்றார்கள். தமது குரலின் பேச்சுத் திறமையே அறிவு என்று எண்ணுகின்ற பொய்யான ஞானிகள் கழு மரத்தில் ஏற்றி இருக்கும் உடலுக்கு மேலே எப்போது இறைச்சியை கொத்தி உண்ணலாம் என்று திரிகின்ற கழுகுகளைப் போலவே ஏமாளிகள் எப்போது கிடைப்பார்கள் அவர்களை ஏமாற்றி அவர்களிடமிருப்பதை பிடுங்கி உண்ணலாம் என்று திரிவார்கள். உண்மையான சிவ ஞானிகள் ஒன்றாக இருக்கின்ற ஐந்து புலன்களும் உடலும் அதனதன் வேலையை செய்து கொண்டு இருந்தாலும் அவற்றை தமது விருப்பத்திற்கு ஏற்றபடி அடக்கும் வல்லமையோடு செத்த பிணத்தைப் போலவே எந்த இடத்திலும் கிடப்பார்கள்.

பாடல் #1672: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் (உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்)

அடியா ரவரே யடியா ரல்லாதா
ரடியாரு மாகாது வேடமு மாகா
வடியார் சிவஞான மானது பெற்றா
ரடியா ரல்லாதா ரடியாரு மன்றே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தைக் கொண்டு இறைவனின் அடியவர்களாக இருக்கின்ற ஞானிகளே அடியவர்கள் ஆவார்கள். அப்படி இல்லாதவர்கள் அடியவர்களாகவும் ஆக மாட்டார்கள் அவர்கள் போடுகின்ற பொய்யான வேடங்களும் உண்மையான அடியாருக்கான வேடமாக இருக்காது. அடியவர் என்பவர்கள் இறைவனது சிவ ஞானமாக இருக்கின்ற உண்மையான ஞானத்தை இறையருளால் பெற்றவர்கள் ஆவார்கள். அவ்வாறு உண்மையான ஞானம் பெறுவதற்கான எந்த தன்மையும் இல்லாதவர்கள் அடியவர்களாக ஆக மாட்டார்கள்.

பாடல் #1673: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் [உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்]

ஞானிக்குச் சுந்தர வேடமு நல்லவாந்
தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே
ஞானமவ் வேடமருண் ஞான சாதன
மானது மாமொன்று மாகாதவ னுக்கே.

விளக்கம்:

உண்மையான ஞானிக்கு எந்த ஒரு அழகிய வேடமும் நல்லதே ஆகும். அவர்களுக்கு தானாகவே அமைந்த வேடமும் அவர்களின் சிவ யோகமாகவே இருக்கின்றது. உண்மையான ஞானமாகவும் அந்த வேடமே இருக்கின்றது. இறைவனின் திருவருள் ஞானத்தை பெறுகின்ற சாதனமாகவும் அதுவே இருக்கின்றது. ஆதலால் உண்மையான ஞானிகளுக்கு அந்த வேடத்தினால் எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படுவது இல்லை.

பாடல் #1674: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் [உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்]

ஞானத்தி னாற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தில் வைத்தல் தனியாலை யத்தனா
மோனத்த னாதலின் முத்தனாஞ் சித்தனா
மேனைத் தவசி யிவனென லாகுமே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தின் மூலம் இறைவனது திருவடிகளை அடைந்து சிவ ஞானத்தை பெற்ற ஞானிகள் தங்களிடமுள்ள அருளை தம்மை நாடி வருகின்ற தகுதியானவர்களுக்கு கொடுக்கின்றதால் அவர்கள் ஒரு தனித்துவம் பெற்ற ஆலயமாகவே இருக்கின்றார்கள். அவர்கள் சொல்லும் செயலும் மனமும் அடங்கிய மோன நிலையிலேயே இருப்பவர்கள் ஆதலால் முக்தி நிலையில் வீற்றிருக்கின்ற முக்தர்களாகவும் சித்தத்தில் எப்போதும் சிவத்தையே நினைத்துக் கொண்டிருப்பதால் சித்தர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களைப் போலவே மற்ற தவசிகளும் இறைவனது திருவடிகளை மட்டுமே எண்ணிக்கொண்டு மோன நிலையில் இருந்தால் இவர்களுடைய நிலையை அடைய முடியும் என்பது உண்மையே ஆகும்.

பாடல் #1675: ஆறாம் தந்திரம் - 11. ஞான வேடம் [உண்மை ஞானம் உள்ளவர்களின் வேடம்]

தானறி தன்மையுந் தானவ னாதலு
மேனைய வச்சிவ மான வியற்கையுந்
தானுறு சாதகர முத்திரை சாத்தலு
மோனமு நந்தி பதமுத்தி பெற்றதே.

விளக்கம்:

தான் யார் என்பதை அறிந்து கொண்ட தன்மையும், தாமே சிவ பரம்பொருளாக ஆகி இருக்கின்ற தன்மையும், தங்களைத் தவிர உலகத்தில் இருக்கின்ற அனைத்தும் மற்றும் நிகழ்கின்ற அனைத்தும் அந்த மூலப் பரம்பொருளாகிய சிவம் ஆகவே இருக்கின்ற தன்மையும், தாம் வீற்றிருக்கின்ற சாதகத்தின் நிலையையே முத்திரையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கின்ற தன்மையும், மனம் பேச்சு செயல் ஆகிய மூன்றும் அடங்கி இருக்கின்ற மோன நிலையில் வீற்றிருக்கின்ற தன்மையும், ஆகிய இவை அனைத்தும் குரு நாதராக இருக்கின்ற இறைவனின் திருவடிகளை அடைந்து முக்தியை பெற்ற உண்மையான சிவ ஞானிகளுக்கு அடையாளங்கள் ஆகும்.



முன்னுரை: சிவ வேடம்

இறைவன் உருவமோ குணமோ தன்மையோ இல்லாதவன். ஆகவே அவனுக்கு என்று எந்த வேடமும் கிடையாது. உண்மையான அடியவர்கள் இறைவனை உணரும் பொழுது எந்த வேடத்தில் இருந்தார்களோ அதுவே இறைவனின் வேடமாக ஆகின்றது. அந்த அடியவர்களின் வேடத்தையே இறைவனாக பாவித்து பல காலமாக வணங்கிக் கொண்டு வருகின்றோம். உதாரணம் கண்ணப்பர் போன்ற பல நாயன்மார்கள்.

பாடல் #1676: ஆறாம் தந்திரம் - 12. சிவ வேடம் [உண்மையான அடியவரின் வேடமே சிவ வேடம் ஆதல்]

அருளா லரனுக் கடிமை யதாகிப்
பொருளாந் தனதுடல் பொற்பதி நாடி
யிருளான தின்றி யிருஞ்செய லற்றோ
தெருளா மடிமை சிவவேடத் தாரே.

விளக்கம்:

இறைவனது திருவருளால் இறைவனுக்கு தானாகவே அடிமையாக தாம் ஆகி பொருளாக இருக்கின்ற தமது உடலே பொன் அம்பலமாக மாறி அதில் நடனமாடும் இறைவனை தமக்குள் தேடி அடைந்து ஆணவம் கன்மம் மாயை என்று இருக்கின்ற மும்மலங்கள் இல்லாமலும் நன்மை தீமை ஆகிய இரண்டு விதமான செயல்களும் இல்லாமலும் ஆகி தாம் பெற்ற ஞானத்தில் தெளிவு அடைந்த உண்மையான அடியவர்களே இறைவனது வேடத்தை கொண்டவர்கள் ஆகும்.

பாடல் #1677: ஆறாம் தந்திரம் – 12. சிவ வேடம் [உண்மையான அடியவரின் வேடமே சிவ வேடம் ஆதல்]

உடலிற் றுலக்கிய வேடமுயிர்க் காகா
வுடல்கழன் றால்வேட முடனே கழலு
முடலுயி ருள்ளமை யொன்றோர்ந்து கொள்ளாதார்
கடலி லகப்பட்ட கட்டையொத் தாரே.

விளக்கம்:

ஞானிகளின் உடலில் இருந்து வெளிப்படுகின்ற வேடமானது அவர்களின் உயிர் நிலையை குறிப்பது ஆகாது. அவர்கள் தங்களின் உடலை நீக்கி விட்டால் அவர்களிடமிருந்து வெளிப்பட்ட வேடமும் அதனுடனே சேர்ந்து நீங்கி விடும். உடலோடு இருக்கும் உயிருக்கு உள்ளே அமைந்து இருக்கின்ற ஒரு பரம்பொருளை ஆராய்ந்து உணர்ந்து கொள்ளாதவர்கள் கடல் அலைகளில் அகப்பட்டுக் கொண்ட கட்டையைப் போலவே பிறவி எனும் சுழற்சியில் சிக்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து துன்பத்தில் உழல்வார்கள்.

பாடல் #1678: ஆறாம் தந்திரம் – 12. சிவ வேடம் [உண்மையான அடியவரின் வேடமே சிவ வேடம் ஆதல்]

மயலற் றிருளற்று மாமன மற்றுக்
கயலுற்ற கண்ணிதன் கைப்பிணக் கற்றுத்
தயவற் றவரோடுந் தாமே தாமாகிச்
செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே.

விளக்கம்:

மாயையாகிய மயக்கம் இல்லாமல், ஆணவம் கன்மம் ஆகிய மலங்கள் இல்லாமல், வலிமையான எண்ணங்களுடைய மனம் இல்லாமல், எப்போதும் விழிப்போடு இருக்கின்ற கண்களை பெற்று இருந்தாலும் அந்த கண்களில் காணும் காட்சியின் தொடர்போ அந்த காட்சியினால் செயல்படும் ஆற்றலின் தொடர்போ இல்லாமல், எவ்வித குணங்களும் இல்லாத இறைவனோடு சேர்ந்து தாமும் இறைவனைப் போலவே ஆகி எந்தவிதமான செயல்களும் இல்லாமல் இருப்பவர்களே உண்மையான சிவ வேடத்தைக் கொண்ட ஞானிகள் ஆவார்கள்.

பாடல் #1679: ஆறாம் தந்திரம் - 12. சிவ வேடம் [உண்மையான அடியவரின் வேடமே சிவ வேடம் ஆதல்]

ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமி னந்தியை நம்பெருமான் றன்னைத்
தேடுமி னின்பபொருள் சென்றெய்த லாமே.

விளக்கம்:

கடிவாளம் கட்டாமல் அங்கும் இங்கும் அலைந்து ஓடுகின்ற குதிரையைப் போல அலைகின்ற மனதை கடிவாளத்தை கட்டி குதிரையை அடக்குவது போல மனதை தியானத்தின் மூலம் உறுதியாக பற்றிக் கொண்டு மனதை அடக்குங்கள். ஞானியைப் போல வெறும் வேடம் மட்டும் போட்டுக் கொண்டு என்ன செய்வீர்கள்? இந்த வீணான வேலை வேண்டாம் மனிதர்களே. உங்களுக்குள் வீற்றிருக்கும் குருநாதனாகிய இறைவன் நமக்கெல்லாம் தலைவனாக இருக்கின்ற அவனை தேடி அடைந்தால் பேரின்ப பொருளாகிய இறைவனை சென்று பேரின்பத்தை அடைய முடியும்.

பாடல் #1680: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

குருட்டினை நீங்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீங்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

விளக்கம்:

மாயையாகிய இருள் விலகுகின்ற உயர்ந்த தன்மை கொண்ட உண்மை குருவினை தேடி அடையாதவர்கள், மாயையாகிய இருள் தம்மை விட்டு இன்னமும் நீங்காத பொய்யான குருவிடமே சென்று சிக்கிக் கொள்கிறார்கள். இது ஒரு குருடனும் இன்னொரு குருடனும் சேர்ந்து பார்வை இல்லாமல் இருளில் இடம் தெரியாமல் தடுமாறி ஆடுவது போல இறைவனை அடையும் வழி தெரியாமல் ஆடி இந்த குருடனும் அவன் உண்மை என்று நம்பிய பொய்யான குருவாகிய குருடனும் சேர்ந்து பிறவிக் குழியில் மீண்டும் மீண்டும் விழுவதற்கான வழியாகவே இருக்கும்.

பாடல் #1681: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

மனத்தி லெழுந்ததோர் மாயக் கண்ணாடி
நினைக்கி லதனி னிழலையுங் காணார்
வினைப் பயன்போக விளக்கியுங் கொள்ளார்
புழைக்கடைக் கிச்சித்துப் போகின்ற வாறே.

விளக்கம்:

உயிர்கள் தங்களின் மனதினில் எழுகின்ற எண்ணங்களை மாயை மறைத்து இருப்பதால் அது ஒரு பொய்யான கண்ணாடியாக இருக்கின்றது. அந்த மனதில் நினைத்துப் பார்க்கின்ற கற்பனையான எண்ணங்களின் நிழலைக் கூட காண முடியாதவர்களாக இருக்கின்றார்கள். தாங்கள் செய்கின்ற வினையின் பயன் தீர்ந்து போவதற்கான வழிமுறைகளை உபதேசித்தாலும் அதை கடை பிடித்து தங்களின் வினைகளை தீர்த்துக் கொண்டு மேல் நிலைக்குப் போகும் வழியில் செல்லாமல், கீழ் நிலைக்கு செல்லும் தங்களின் ஆசைகளினால் மேலும் மேலும் பிறவிகள் எடுக்கின்ற வழியிலேயே செல்கிறார்கள்.

பாடல் #1682: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

ஏயெனி லேயென மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மதுரநின் றூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளொ
ருவூனிலை செய்யு முருவிலி தானே.

விளக்கம்:

ஏய் என்று அழைத்தால் மறுபடியும் ஏய் என்று சொல்லாமல் தன்னை அழைக்கிறார்கள் என்ன என்று கேட்போம் என்கிற அடிப்படை அறிவு இருக்கின்ற சாதாரண மனிதர்கள் கூட தாம் குழந்தையாக இருந்த பருவத்தில் வாய்க்குள் வைத்த தாயின் மார்பில் இருந்து வருகின்ற இனிமையான பால் ஊறுகின்ற தமது தாயின் மார்பகமாக இருப்பது எது என்பதை அறியாமல் இருக்கின்றார்கள். தமக்கு உள்ளே இருக்கின்ற ஒரு சக்தியாக இருந்து தமது உடலை நிலையாக பிடித்து வைத்து இருக்கின்றது உருவம் இல்லாத இறைவனே என்பதை அவர்கள் அறிவது இல்லை.

கருத்து:

இயல்பான அறிவு இருக்கின்ற சாதாரண மனிதர்கள் கூட தாங்கள் குழந்தையாக இருக்கின்ற போது கிடைத்த முதல் உணவான பாலில் இருந்து தமக்குள் இயங்குகின்ற அனைத்தும் தமக்குள் இருக்கின்ற இறைவனே செய்கின்றான் என்பதை உணராமல் இருக்கின்றார்கள்.

பாடல் #1683: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க
நீயொன்று செய்ய வுறுதி நடந்தாகா
தீயென்றிங் குன்னைத் தெளிந்தேன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னை பிறர்தெளி யாரே.

விளக்கம்:

வாயின் மூலம் ஒன்று சொல்லவும், அதே நேரம் மனமானது வேறொன்றை சிந்திக்கவும், அப்போது நீங்கள் வேறொன்றை செய்வதாகவும் இருந்தால் உறுதியாக நடப்பது எதுவும் பயன் ஆகாது. எனக்குள்ளேயே இருக்கின்ற பேரொளியான தீயின் உருவம் என்று இந்த உலகத்திலேயே இறைவனாகிய உன்னை யான் தெளிவாக அறிந்து கொண்டேன். அவ்வாறு தெளிவாக அறிந்த பிறகு இறந்து பேயாகின்ற மற்றவர்களைப் போன்றவன் என்று இந்த உலகத்தில் என்னை வேறு யாரும் நினைக்க மாட்டார்கள்.

கருத்து: மனமும் வாக்கும் உடலும் ஒன்றாக செயல் படும் படி எதையும் செய்தால் அது நம்மை ஞானியாக்கி நமக்குள் இருக்கின்ற இறைவனை அறிந்து கொள்ள வைத்து இனி பிறவி எடுக்காத நிலைக்கு நம்மை கொண்டு செல்லும்.

பாடல் #1684: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

பஞ்சத் துரோகத் ததிபாதகர் தம்மைப்
பஞ்ச சமையத்தோர் வேந்த னருந்தெண்டம்
விஞ்சத்த வப்புவி வேறே விடாவிடிற்
பஞ்சத் துள்ளாகிப் புவியெங்கும் பாட்குமே.

விளக்கம்:

கொலை களவு கள் [மது] காமம் பொய் கூறல் ஆகிய ஐந்து வகையான மகா பாவங்களையும் ஒரு உண்மையான ஞானியைப் போல பொய்யான வேடம் அணிந்தவர்கள் தம்மை நம்புகிறவர்களை ஏமாற்றி துரோகம் செய்வது அந்த மகா பாவங்களுக்கும் மேலான பாதகர்களாக அவர்களை ஆக்குகின்றது. அப்படி ஐந்து வகையான மகா பாவங்களுக்கும் மேலான பாவங்களை செய்பவர்களை பார்த்து அவர்களைப் போலவே மற்றவர்களும் அந்த பாவங்களை கடை பிடித்து விடாத படி அந்த நாட்டை ஆளுகின்ற அரசன் அந்த பஞ்ச மகா துரோகிகளுக்கு மிகவும் கொடுமையான தண்டனையைக் கொடுத்து தங்களின் புண்ணியமான நாட்டை விட்டு அவர்களை விலக்கி வைத்து வேறு இடத்திற்கு போகும் படி கொண்டு சென்று விடாமல் இருந்தால் அவர்களின் புண்ணிய நாடு பஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்டு முழுவதும் பாழாக போய் விடும்.

பாடல் #1685: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்)

தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்
சிவத்திடை நின்றது தேவ ரறியார்
தவத்திடை நின்றறி யாதவ ரெல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே.

விளக்கம்:

இறைவனை மட்டுமே எண்ணிக் கொண்டு தவம் புரிகின்ற வழியில் நிற்கின்ற தவசிகள் தாங்கள் அனுபவிக்க வேண்டியதும் இனி சேருவதும் ஆகிய கர்மங்கள் அனைத்தும் அதை உருவாக்கிய இறைவன் இடத்திலேயே சென்று சேர்ந்து விடுவதை தேவர்களும் அறிய மாட்டார்கள். தவத்தின் வழியில் நின்று இந்த பேருண்மையை அறிந்து கொள்ளாதவர்கள் எல்லாரும் பிறவி எனும் கட்டுக்குள் அகப்பட்டு நின்றது ஒரு முடிவில்லாத வினைகளை அனுபவிக்கும் நிலையிலேயே இருக்கின்றார்கள்.

பாடல் #1686: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

கன்றல் கருதலுங் கருமை சேர்தலுந்
தின்றல் சுவைத்தலுந் தீமைகள் செய்தலும்
பின்றமை யென்றலும் பெருமை கூறலு
மென்றிவை யிறைபா லிசைகை யல்லவே.

விளக்கம்:

அகங்காரத்தினால் வரும் கோபத்தை எண்ணி இருப்பதும், நான் என்கின்ற எண்ணத்தோடு செயல்களை செய்து கர்மங்களை சேர்த்துக் கொள்வதும், உயிரை வளர்ப்பதற்காக சாப்பிடாமல் வாய் சுவைக்காக ஆசைப் பட்டு சாப்பிடுவதும், தர்மத்திற்கு எதிரான தீய செயல்களை செய்வதும், தமக்கு பின்பு தான் மற்றவர்கள் என்கிற சுய நலத்தோடு இருப்பதும், தற்பெருமை பேசுவதும், ஆகிய இந்த ஆறு விதமான தன்மைகளும் இறைவனோடு சேர்ந்து இருக்கும் நிலைக்கு கொண்டு செல்லாது.

பாடல் #1687: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்
கடியதோ ருன்னிமை கட்டுமின் காண்மின்
விடியாமைக் காக்கும் விளக்கது வாமே.

விளக்கம்:

மாயையாகிய இருள் நீங்கி ஜோதியாகிய வெளிச்சம் கிடைப்பதை அறிய மாட்டார்கள். அந்த வெளிச்சம் காட்டுகின்ற பரவெளியை பார்க்க மாட்டார்கள். மாயையாகிய இருள் நீங்கி ஜோதியாகிய வெளிச்சத்தில் தம்மை சுற்றி உள்ள அனைத்திலும் மாயையாகிய இருள் நீங்கிய உண்மை ஞானத்தை காணவும் மாட்டார்கள் அபக்குவர்கள். அவர்களைப் போல இல்லாமல் தமக்குள் கிடைப்பதற்கு மிகவும் அரியதாக இருக்கின்ற ஒரு இறை சக்தியில் மனதை வைத்து தியானித்து மாயையை கட்டுங்கள். அப்போது இருள் நீங்கி தெரியும் ஜோதியாகிய இறைவனை காணுங்கள். இனி எப்போதும் மாயையாகிய பிறவியை எடுக்காத நிலைக்கு உங்களை கொண்டு செல்லும் ஜோதி அதுவே ஆகும்.

பாடல் #1688: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் கீயப் பெறாதானே.

விளக்கம்:

பிறக்கும் போதே உடலுக்குள் வைத்த இருளுக்குள் இருக்கின்ற ஆன்மாவையும் அதை கட்டி இருக்கின்ற மலங்களையும் நீக்கி வெளிச்சத்திற்கு மாற்றுவதற்கான வழி முறையையும் வைத்து அருளி இருப்பதை உணர்ந்து, அந்த வழி முறைகளின் மூலம் பாசமாகிய கட்டுக்களை இல்லாமல் செய்து, முக்தி நிலையை பெற்றவன் ஆகி இல்லாமல், தாம் செல்ல வேண்டிய வழி முறையில் இருந்து மாறுதல் அடைந்து, உலக பற்றுக்களுக்கான தத்துவங்களையே நினைத்துக் கொண்டு, இறைவனை அடைவதை மட்டுமே குறிக்கோளாக எடுத்துக் கொள்ளாமல், உலக ஆசைகளுக்கு ஏற்றபடியே நடந்து, உலக ஆசைகளில் மயங்கி இருக்கின்ற பக்குவமில்லாத சீடனுக்கு உண்மையான ஞானத்தை கொடுக்க மாட்டார்கள் குருவானவர்கள்.



பாடல் #1689: ஆறாம் தந்திரம் - 13. அபக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சி இல்லாதவர்கள்]

மன்னு மலமைந்தும் மாற்றும் வகையோரான்
துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதா
னன்னிய னாவா னசற்சீட னாமே.

விளக்கம்:

உலக பற்றுக்களிலேயே நிலை பெற்று இருக்கின்ற மலங்களாகிய ஐந்து புலன்களையும் மாற்றுகின்ற வழி முறையை ஆராய்ந்து அறிந்து கொள்ளாதவன், தன்னைப் பெருந்தி இருக்கின்ற காமம் முதலாகிய ஆசைகளில் தோய்ந்து இருக்கின்ற செயல்களை விட்டு நீங்காமல் இருக்கின்றவன், ஒன்றன் பின் ஒன்றாக பின்னிக் கொண்டே இருக்கின்ற பொய்களை கூறுபவன், மீண்டும் மீண்டும் வருகின்ற பிறவிகளுக்கோ அல்லது மீண்டும் மீண்டும் வருகின்ற இறப்பிற்கோ தன் மூடத்தனத்தால் அச்சப் படமால் இருக்கின்றவன் ஆகிய தன்மைகளைக் கொண்டவன் குருவுக்கு நெருக்கம் இல்லாதவனாகி உண்மையில்லாத சீடனாகவே இருப்பான்.



பாடல் #1690: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

தொழு தறிவாளர் சுருதி கண்ணாகப்
பழு தறியாத பரம குருவை
வழி யறிவார் நல்வழி யறிவாள
ரழி வறிவார் மற்றையல்லா தவரே.

விளக்கம்:

இறைவனை பக்தியோடு வணங்கும் முறையை அறிந்தவர்கள் இறைவனை அடைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இருக்கும் போது, இறையருள் ஒரு குற்றமும் அறியாத புனிதமான இறை நிலையை அடைந்த குருவை அவருக்கு காட்டி அருளும். அந்த குருவின் மூலம் இறைவனை அடையும் வழியை அறிந்து கொண்டவர்களே நல்ல வழியை அறிந்து கொண்ட பக்குவர்கள் ஆவார்கள். நல்லது இல்லாத மற்ற ஆசைகளின் வழியே போகின்றதை மட்டுமே அறிந்து கொண்டவர்கள் மீண்டும் மீண்டும் இறந்து பிறப்பதற்கான வழியையே அறிந்தவர்கள் ஆவார்கள்.

பாடல் #1691: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

பதைத் தொழிந்தேன் பரமாவுன்னை நாடி
யதைத் தெழுந்தேற் றினியாரோடுங் கூடேன்
சிதைத் தடியேன் வினை சிந்தனைதீர
வுதைத் துடையா யுகந்தாண்டரு ளாயே.

விளக்கம்:

உன்னை எப்போது அடைவேன் என்ற துடிதுடிப்பில் உன்னை அடைவதற்கு தடையாக இருக்கின்ற ஆசைகளை ஒழித்தேன். பரம்பொருளே உன்னை தேடி அலைந்து திரிந்து நீ எழுந்தருளிய இடத்திற்கெல்லாம் சென்று உன்னை போற்றி வணங்கி அடைந்தேன். இனி வேறு யாரோடும் சேர மாட்டேன். உன்னிடம் மட்டுமே சேருவேன். நீ கருணை கொண்டு அடியேனுடைய நல் வினை தீ வினை ஆகிய இரு வினைகளையும் சிதைத்து அழித்து உன்னைத் தவிர வேறு எதிலும் எனது சிந்தனை போகாத படி மற்ற அனைத்து சிந்தனைகளும் தீர்ந்து போகும் படி உதைத்து அவற்றை உடைந்து போகும் படி செய்ய மாட்டாயா? அடியேனை மனமுவந்து உன் தொண்டனாக ஆட்கொண்டு அருள மாட்டாயா?

பாடல் #1692: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்]

பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேனின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
யிசைக்கின்ற வன்பருக் கீயலு மாமே.

விளக்கம்:

இறைவனை அடைய வேண்டும் என்று துடிதுடிக்கின்ற போதே பரம்பொருள் என்று அறியப்படும் அனைத்திற்கும் மூல விதையான இறைவன் அடியவருக்குள் விதைக்கின்ற மாயை நீங்கி உணரக்கூடிய இறை சக்தியை குருவின் அருளால் தலை உச்சிக்கு மேல் மூச்சுக்காற்றை எடுத்துச் சென்று அங்கே வீற்றிருக்கும் இறை சக்தியை தரிசித்து இறைவனை அடைவதற்கு தடையாக வேறு வழிகளில் சிதைந்து போகின்ற சிந்தனைகளை சீர்படுத்தி அவற்றை இறைவன் மேல் மட்டும் எப்போதும் இருக்கும் படி நிறுத்தி இறைவனோடு எப்போதும் சேர்ந்தே இருக்கின்ற பக்குவமுள்ள அன்பர்களுக்கு இறைவன் தமது அருளை கொடுத்து அருளுவான்.

பாடல் #1693: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்ளுக
வுள்ள பொருளுட லாவி யுடனீய்க
எள்ளத் தனையு மிடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே.

விளக்கம்:

ஏற்றுக் கொண்டாலும் ஒரு நல்ல குருவை தேடி ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய உள்ளம் பொருளாகிய ஆன்மா உடல் ஆவியாகிய உயிர் ஆகிய நான்கும் சேர்ந்து குருவிற்கே உடமையாக கொடுத்து சரணாகதியாகி விடுங்கள். எள்ளின் அளவிற்கு கூட சிறிதளவும் மனம் தவற விடாமல் குருவிடமே சரணாகதியாக நின்று குருவின் அருளால் உண்மை ஞானத்தை தெளிவாக அறிந்து கொண்டால் இறைவனின் திருவடியை நீங்கள் அடையலாம்.

பாடல் #1694: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்]

சோதி விசாகந் தொடர்ந்திருந் தேள்நண்டு
வோதிய நாளே யுணர்வது தானென்று
நீதியு ணீர்மை நினைந்தவர்க் கல்லது
வாதியு மேது மறியகி லானே.

விளக்கம்:

பௌர்ணமி அன்று விசாக நட்சத்திரம் வருகின்ற நாளில் இருந்து ஆரம்பித்து அடுத்து வருகின்ற விருச்சிக இராசியிலிருந்து கடக இராசி வரை உள்ள நாள்களில் குருவிடமிருந்து பெற்ற மந்திரத்தை ஓதிக் கொண்டு இருந்தால் ஒரு நாளில் தாமாக இருப்பது இறைவனே என்று உணர்ந்து கொள்ள முடியும். அதன் பிறகு இதுவரை தாம் செய்கின்ற அனைத்து செயல்களுக்கு உள்ளேயும் இறைவனே இருந்து செய்கின்றான் என்பதை உணர்ந்து, தான் என்கின்ற தன்மை இல்லாமல் இறைவனை நினைக்க முடிந்தவர்களைத் தவிர வேறு யாருக்கும் இறைவன் முதலாகிய அனைத்து உண்மைகளையும் அறிந்து கொள்ளுவது இயலாது.

பாடல் #1695: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்]

தொழிலார மாமணி தூயான சிந்தை
யெழிலா ரிறைவ னிடங்கொண்ட போத
வழலார் விறகாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே.

விளக்கம்:

இறைவனை அடைவதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செய்கின்ற சாதகத்தில் முழுமை பெற வேண்டுமென்றால் மாபெரும் மணியாக இருக்கின்ற இறைவனின் மேல் தமது சிந்தனைகளை வைத்து அவனருளால் தூய்மையாக ஆகி விட்ட சிந்தனையோடு பேரழகு நிறைந்து இருக்கின்ற இறைவன் வீற்றிருக்கின்ற குருவிடமிருந்து தாம் பெற்ற போதனைகளை கடை பிடித்தால், நெருப்பில் மூடிய விறகு கட்டையும் எரிந்து நெருப்பாகவே ஆகி விடுவது போல தம்முடைய வினைகள் அனைத்தும் தம்மை விட்டு விலகி அழிந்து போய் விடும். அதன் பிறகு சிலம்புகளை அணிந்து பேரழகோடு இருக்கும் இறைவனின் திருவடிகளை தரிசித்து அவனது அருளை பெறலாம்.



பாடல் #1696: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

சாத்திக னாய்ப்பல தத்துவந் தானுன்னி
யாத்திக வேதநெறி தோற்ற மாகியே
யார்த்த பிறவியி னஞ்சி யறனெறி
சாத்தவல் லானவனே சற்சீட னாமே.

விளக்கம்:

நன்மை தீமை எது நடந்தாலும் அதனால் பாதிக்கப் படாமல் சாத்வீக (சாந்தம் / அமைதி) குணத்தோடு குருநாதர் அருளிய பல தத்துவங்களை தனது மனதிற்குள் வைத்து நினைத்து தியானித்து, இறைவன் உண்டு என்று நம்பி அவனை அடைவதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு அதற்காக வேதம் சொல்லுகின்ற வழிமுறைக்கான தோற்றமாகிய தவ வேடமாகவே தாம் ஆகி, வினைகளின் பயனால் கிடைக்கப் பெற்ற இந்த பிறவிக்கும் இனி எடுக்கப் போகின்ற பிறவிகளுக்கும் பயந்து இனி பிறவியே எடுக்காமல் இருப்பதற்கு வேண்டிய தர்மத்தின் வழிமுறையை கடை பிடித்து, தமது ஆசைகள் பற்றுக்கள் அனைத்தையும் குருவிடம் சரணடைந்து சமர்ப்பிக்க முடிந்தவன் எவனோ அவனே சிறந்த உண்மையான சீடன் ஆவான்.



பாடல் #1697: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

சத்து மசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியில் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியி லிச்சை தருவோன்சற் சீடனே.

விளக்கம்:

நிலையானதும் நிலை இல்லாததும் எவ்வாறு இருக்கின்றது என்பதை தனக்குள்ளேயே ஆராய்ந்து அறிந்து, நிலையான இறைவனை உணர்ந்து அவன் மேல் உண்மையான அன்பினால் உருகும் போது, இறைவன் தனது திருவருளால் ஒரு உண்மையான குருவினை காட்டி அருளுவான். அப்படி இறைவன் காட்டி அருளிய குருவின் மீது கொண்ட பக்தியின் மூலம் உண்மை ஞானத்தை பெறுவதற்கு அவரது திருவடிகளை பணிந்து, அந்த குருவின் அருளால் கிடைக்கின்ற பேரானந்த சக்தியே வேண்டும் என்று தன்னையே முழுவதுமாக குருவிடம் ஒப்படைத்து தருபவனே உண்மையான சீடன் ஆவான்.

பாடல் #1698: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

அடிவைத் தருளுதி யாசானின் றென்னாய்
வடிவைத்த மாமுடி மாயாப் பிறவி
யடிவைத்த காய வருட்சத்தி யாலே
யடிபெற்ற ஞானத்த னாசற்று ளானே.

விளக்கம்:

தங்களின் திருவடியை என் தலை மீது வைத்து அருளுங்கள் குருநாதரே என்று வேண்டி நிற்கின்ற தனது உடல் பொருள் ஆவியெல்லாம் குருவிற்கே உடமையாக்கிய சீடனின் வேண்டுகோளுக்கு இணங்கி அதன் படியே திருவடியை வைத்த மாபெரும் தலைவனாகிய இறைவனாகவே இருக்கின்ற குருவின் திருவருளால் மாயையாகிய பிறவி நீங்கப் பெற்று, அவரின் திருவடியை வைத்த சீடனின் உடல் இறைவனது திருவருள் சக்தியின் மூலம் முழுமையடையும் போது குருவின் திருவடியினால் பெற்ற ஞானத்தினால் உண்மை ஞானியாகி, ஒரு குற்றமும் இல்லாமல் இருப்பவனே உண்மையான சீடன் ஆவான்.



பாடல் #1699: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றா
ராராயு ஞானத்த னாமடிவைக் கவே.

விளக்கம்:

பாடல் #1698 இல் உள்ளபடி குருவின் திருவடியினால் பெற்ற ஞானத்தினால் உண்மை ஞானியாகிய சாதகரிடம் இதுவரை உலக பற்றுக்களின் மேல் இருந்த ஆசைகள் விலகிப் போக விலகிப் போக அவற்றின் மேல் இனி பற்று வராது. அந்த பற்றானது இறைநிலையில் இருக்கின்ற தமது குருநாதரின் மேலேயே அதிகமாக கூடி வரும். அதன் பிறகு இதுவரை அவரது கைக்கு சரிவர கிடைக்காத சாந்தி, தாந்தி, உபாதனை, தீட்சை ஆகிய நான்கு விதமான சாதகங்களும் அவரது கைவசப் படும்படி பேறு பெறுவார். அதன் பிறகு அக (உள்ளுக்குள்ளும்) புற (வெளியிலும்) ஆராய்ச்சியின் மூலம் ஞானத்தின் உச்ச நிலைக்கு சென்று கொண்டே இருப்பார்.

நான்கு விதமான சாதகங்கள்:

1. சாந்தி - அசைவற்ற நிலையில் சாதகம் செய்தல் / பேரமைதி
2. தாந்தி - எண்ணங்களற்ற நிலையில் சாதகம் செய்தல் / மன அடக்கம்
3. உபாதனை - வினைகளை சாதகம் செய்து எரித்து தீர்த்தல்
4. தீட்சை - சந்தேகம் வரும் போது சாதகத்தின் மூலம் ஒரு கண நேரத்தில் குரு வார்த்தை கேட்டல்

மேலுள்ள நான்கு விதமான சாதகங்களைப் பற்றிய குறிப்புகள் சுவடியில் உள்ளது.

பாடல் #1700: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் [இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்]

உணர்த்து மதிபக்கு வற்கே உணர்த்தி
யிணக்கில் பராபரத் தெல்லை யுன்னிட்டுக்
குணக்கோடு தெற்குத் தரபச்சி மங்கொண்
டுணர்த்து மின்னாவுடை யான்றன்னை யுன்னியே.

விளக்கம்:

பரம்பொருளின் பேருண்மைகளை உணர்த்துகின்ற ஞான குருவானவர் மிகவும் பக்குவம் பெற்ற சீடனுக்கே அவற்றை உணர்த்தி, அனைத்துமாக இருந்தாலும் அதனோடு சேர்ந்து இல்லாமல் விட்டு விலகி நிற்கின்ற அசையா சக்தியாகிய பரம்பொருளின் எல்லைக்கு உள்ளே சீடனை கொண்டு சென்று, கிழக்கோடு தெற்கு வடக்கு மேற்கு ஆகிய நான்கு திசைகளையும் கொண்டு இருக்கின்ற அனைத்து பொருள்களிலும் மறைந்து இருக்கின்ற பேருண்மையாகிய பரம்பொருளை உணர்த்துவார்கள். ஆன்மாக்களுக்கெல்லாம் அதிபதியாகிய ஆண்டவனை தமது மனதிற்குள் தியானித்தே இவை அனைத்தையும் அவர்கள் செய்வார்கள்.

பாடல் #1701: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

இறையடி தாழ்ந்தை வணக்கமு மெய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றிச்
சிறையுடன் னீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தை அறிந்தவராகிய குருவானவர் இறைவனின் திருவடிகளை பணிந்து வணங்கி இறையருளால் அண்டத்தில் இருக்கின்ற ஐந்து பூதங்களையும் தமக்குள் இருக்கின்ற ஐந்து பூதங்களோடு இணைத்து அவற்றை இறைவனாகவே உணர்ந்து வணங்குகின்ற நிலையை அடைந்தவராகவும், தமக்குள் இருக்கின்ற குறைகள் எது என்பதை இறைவனிடம் எடுத்துக் கூறி அவனருளால் அவற்றை நீக்கி விட்டு இறையருளால் புனிதமான குணத்தை கொண்டு அதற்கு நன்றி கூறி இறைவனை போற்றி வணங்குபவராகவும், மாயை எனும் சிறை உடன் சேர்ந்து தன்னுடன் இருக்கின்ற உடல் பொருள் ஆகிய அனைத்தும் தான் என்று நினைக்கின்ற சீடருக்கு நீ என்பது இந்த உடம்போ உடமைகளோ அல்ல நீ என்பது உனக்குள் இருக்கின்ற ஆன்மா என்பதை மாயையை நீக்கி காட்டி அருளுபவராகவும், இறைவனுடைய அருளோடு சேர்ந்து இருந்து சீடருடைய அறிவுக்கு புரியும் படி உண்மை அறிவை அறிவிக்கின்றவராகவும் இருக்க வேண்டும். இப்படி இருக்கின்ற குருவே அழிவில்லாத சன் மார்க்கத்தில் இருப்பவர் ஆகும்.

பாடல் #1702: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச் சித்தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே.

விளக்கம்:

அனைத்து விதமான ஆசைகளையும் விடுகின்ற வழி முறையே வேதத்தின் எல்லையாகிய அனைத்தும் சொல்லுவதால், உலக வாழ்க்கையை ஐந்து புலன்களாகிய கண், காதுகள், மூக்கு, வாய், தொடுதல் ஆகியவற்றின் வழியே சென்று கொண்டு இருப்பதை மாற்றி விட்டு, அனைத்து விதமான எண்ணங்களையும் நீக்கி ஒடுங்குதலை செய்து, அனைத்து விதமான ஆசைகளையும் விட்டு விடுவதில் மிகவும் சிறந்து இருக்கின்றவரும், அனைத்து வேதங்களுக்கும் எல்லையாக இருக்கின்ற இறை நிலையில் இருக்கின்றவரும் ஆகிய குருவின் திருவடிகளை பணிந்து வணங்குவதை மட்டுமே தலையாக கொண்டு வாழ்பவனே உண்மையான சீடன் ஆகும்.

பாடல் #1703: ஆறாம் தந்திரம் - 14. பக்குவன் (இறைவனை அறிவதற்கான மன முதிர்ச்சியை பெற்றவர்கள்)

சற்குணம் வாய்மை தயாவிவேகந் தண்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புதமே தோன்ற லாகுஞ்சற் சீடனே.

விளக்கம்:

எதிலும் உண்மையாகவே இருத்தல், எப்போதும் உண்மையையே பேசுதல், அனைத்து உயிர்களின் மேலும் அன்பும் கருணையும் கொண்டு இருத்தல், உண்மையான ஞானமாகிய அறிவோடு இருத்தல், எது நடந்தாலும் அதனால் பாதிக்கப் படாமல் இருத்தல், உண்மையான குருவின் திருவடிகளை அதன் நிழல் போல எப்போதும் நீங்கி விடாமல் சேர்ந்தே இருத்தல், சித்தத்தில் இறைவனது பேரறிவு ஞானத்தை தெளிவாக உணரும் படி குருவின் அருளோடு தெளிவாக ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல், மனிதர்களுக்கு மேலான நிலையில் அற்புதமான சக்திகளை உலக நன்மைக்காக செய்து காட்டுதல், ஆகிய இவைகளோடு இருப்பவனே உண்மையான சீடன் ஆவான்.





ஆறாம் தந்திரம் முற்றியது.

தொடர்புக்கு: 9677074974
மேலும் அறிந்து கொள்ள:
https://kvnthirumoolar.com